தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

22.05.2013 A.M

## நவீன தொழில்நுட்பப் புரட்சியால் மட்டுமே விவசாயம் வளர்ச்சி அடையும்'

தற்போதுள்ள சூழ்நிலையில் நவீன தொழில்நுட்பப் புரட்சி மூலம் மட்டுமே விவசாயத்தை வளர்ச்சி அடையச் செய்ய முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தன் தெரிவித்தார்.

வானூர் வட்டம், பொம்பூர் கிராமத்தில் உழவர் பெருவிழா நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

இவ் விழாவுக்கு விழுப்புரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தன் தலைமை தாங்கி பேசியது:

"தற்போது விவசாய நிலங்களும், விவசாயத்துக்குத் தேவையான தொழிலாளர்களும் குறைந்து கொண்டே வருகின்றனர். இந்நிலையில் விவசாய உற்பத்தியைப் பெருக்கி விவசாயிகளின் வாழ்வாதாரங்களை அதிகரிக்க வேண்டுமென்றால் நவீன தொழில்நுட்பப் புரட்சி மூலம் மட்டுமே சாத்தியப்படும்.

தமிழகத்தைவிட நீர்வளம் மற்றும் நிலவளம் குறைந்த நாடான இஸ்ரேல் போன்ற நாடுகள் பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து உலகின் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு வேளாண்மையில் உயர்ந்துள்ளன.

எனவே நாம் நவீன தொழில்நுட்பப் புரட்சி மூலம் இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்க வேண்டும். இதை உணர்ந்த தமிழக முதல்வர் உழவர் பெருவிழா மூலம் விவசாயிகள் இருக்கும் இடத்துக்கே நேரில் சென்று அரசு நலத்திட்டங்கள், நவீன தொழில்நுட்பம் குறித்த கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து வேளாண்மைத் துறை அதிகாரிகள் இதுபோன்ற விழாக்களை நடத்தி வருகின்றனர்' என்றார்.

இவ் விழாவில் வேளாண்மை இணை இயக்குநர் சேகர், வானூர் சட்டமன்ற உறுப்பினர் ஜானகிராமன், வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார், மாவட்ட கவுன்சிலர்கள் பக்தவச்சலம், சக்கரபாணி, முகையூர் மாவட்ட கவுன்சிலர் தங்கராஜ், உளுந்தூர்பேட்டை மாவட்ட கவுன்சிலர் கோ.தண்டபாணி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## பழனி அருகே விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கல்

பழனி அருகே பெரியகலையம்புத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், பழனி மற்றும் சுற்றுப் பகுதிகளில் மழை இல்லாததால், அணைகளில் முற்றிலும் தண்ணீர் வற்றி, கடும் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டது. இதனால், பழனி மற்றும் சுற்றுப் பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் நெல், கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்களை பயிர் செய்து இழப்பை சந்தித்துள்ளனர்.

இந்நிலையில், தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால், சென்னை தவிர பிற மாவட்டங்கள் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அரசு அறிவித்தது. மேலும், இழப்பீடு வழங்க வேண்டுமென்று விவசாய சங்கங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 ஆயிரம் வழங்கவும் உத்தரவிடப்பட்டது. அதன்படி, பழனி சுற்றுப் பகுதிகளில் சுமார் 53,845 ஏக்கர் நிலங்கள் பாதிப்படைந்துள்ளது தெரியவந்தது. இதற்காக, ரூ. 17 கோடியே 66 லட்சத்து 28 ஆயிரத்து 610 ஒதுக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை, சின்னக்கலையமுத்தூர், பெரியகலையமுத்தூர், கரடிக்கூட்டம், பாப்பம்பட்டி, கணக்கன்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

பழனி அருகே பெரியகலையமுத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, சங்கத் தலைவரும், அதிமுக ஒன்றியச் செயலருமான ஆறுமுகம் வரவேற்புரை வழங்கினார். பழனி ஒன்றியக் குழுத் தலைவர் செல்லசாமி முன்னிலை வகித்தார். அர்பன் வங்கித் தலைவர் மாரியப்பன், நெய்க்காரபட்டி பேரூராட்சித் தலைவர் விஜயசேகரன், தனி அலுவலர் காளியப்பன் உள்ளிட்ட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

பழனி தொகுதி எம்.எல்.ஏ. வேணுகோபாலு சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு காசோலைகளை வழங்கினார். பெரியகலையமுத்தூரைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ.13,350, ரவிமங்கலத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ.1,98,350,

நெய்க்காரபட்டி விவசாயிகளுக்கு ரூ.12,21,910, பெருமாள்புதூரைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ.10,51,910, பெரியம்மாபட்டியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ.11,28,540 என சுமார் ரூ. 39 லட்சத்துக்கு காசோலைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், நெய்க்காரபட்டி பேரூர் செயலர் சுந்தரம், ஒன்றியக் குழு உறுப்பினர் முத்துச்சாமி, நேர்முக உதவியாளர் பெரியசாமி, நிர்வாக அலுவலர் சுந்தரம் மற்றும் சங்க துணைத் தலைவர், நிர்வாகிகள் என பலர் பங்கேற்றனர்.

## தமிழகத்தில்தான் வேளாண் அபிவிருத்திக்கு ரூ.5135 கோடி நிதி ஒதுக்கீடு: அமைச்சர்

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் வேளாண் அபிவிருத்திக்கு முதல்வர் ஜெயலலிதா ரூ.5,135 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் என்று அமைச்சர் சுந்தரராஜ் கூறினார்.

கமுதி அருகே அச்சங்குளத்தில் உழவர் பெருவிழா நிறைவு நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. மாவட்ட வேளாண் துறை இணை இயக்குநர் சக்தி மோகன் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சிகள் கவுன்சில் தலைவர் எம். சுந்தரபாண்டியன், மண்டபம் ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலர் ஜி. முனியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கமுதி வட்டார வேளாண் உதவி இயக்குநர் எம். சக்கரவர்த்தி வரவேற்றார்.

விழாவில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் எஸ். சுந்தரராஜ் பேசினார். விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்புள் ள ஆயில் மோட்டார், விசைத் தெளிப்பான், கைத்தெளிப்பான் ஆகியவற்றை அமைச்சர் சுந்தரராஜ் வழங்கினார். நவீன விவசாயக் கண்காட்சியையும் அவர் திறந்து வைத்தார்.

கமுதி வட்டார விவசாய துணை அதிகாரி பா. சேதுராம் நன்றி கூறினார்.

## கோவை மாவட்டத்தில் 162 மி.மீ. மழை பதிவு

கோவை மாவட்டத்தில் திங்கள்கிழமை இரவு 162 மில்லி மீட்டர் அளவுக்கு மழை பெய்துள்ளது.

கோவையில் கோடை வெயில் சுட்டெரித்து வந்த நிலையில், கடந்த இரு நாள்களாக இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது. இதனால் வெயில் உக்கிரம் குறைந்து நகரில் இதமான சூழ்நிலை நிலவுகிறது.

மாவட்டத்தில் திங்கள்கிழமை இரவு பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்): கோவை தெற்கு -33, மேட்டுப்பாளையம்-24, அன்னூர், பீளமேடு -17, சூலூர், பொள்ளாச்சி-15, வால்பாறை

பி.ஏ.பி.-13, வால்பாறை தாலுகா அலுவலகம் -10, பெரியநாயக்கன்பாளையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்-5.

## 30-ல் விவசாயிகள் விழிப்புணர்வு மாநாடு

கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைளை வலியுறுத்தி, தாராபுரத்தில் வரும் 30-ம் தேதி விவசாயிகள் விழிப்புணர்வு  மாநாடு நடைபெற உள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் திருப்பூர் மாவட்டத் தலைவர் ஏ. காளிமுத்து நிருபர்களிடம் செவ்வாய்கிழமை கூறியது:

போதிய நீர், மின்சாரம், உதவித் தொகைகளை மத்திய அரசு வழங்காமல் தமிழக மக்களுக்கு தொடர்ந்து துரோகம் இழைத்து வருகிறது.

இதைக் கண்டித்தும், பால் ஒரு லிட்டருக்கு ரூ.40 வழங்க வேண்டும் எனக் கோரியும் மாநாடு நடைபெறுகிறது.

முன்னதாக அண்ணாசிலை முன்பு விவசாயிகளின் இருசக்கர பேரணி துவங்குகிறது என்றார்.

கட்சி திருப்பூர் மாநகர தலைவர் ஜி.எஸ்.மணி, மாவட்ட கொள்கை பரப்புச் செயலாளர் கி. ஆறுமுகம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## 2 ஆயிரம் வாழை மரங்கள் சேதம்

திருப்பூர் அருகே தொரவலூர் ஊராட்சிக்குள்பட்ட வாரணவாசிபாளையத்தில் பலத்த காற்றுடன் பெய்த மழையினால் 2 ஆயிரம் வாழை மரங்கள் சாய்ந்து சேதமடைந்தன.

தொரவலூர் ஊராட்சிக்குள்பட்ட வாரணவாசிபாளையம், பி.ஆண்டிபாளையம், கந்தாம்பாளையம், ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சிக்குள்பட்ட அப்பியாபாளையம் கிராமங்களில் திங்கள்கிழமை காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதில், வாரணவாசிபாளையத்தில் பலத்த காற்றுவீசியதால் விவசாயிகளின் தோட்டத்தில் வாழைமரங்கள் சாய்ந்து சேதமடைந்தன.

வாரணவாசிபாளையத்தில் அம்மாசுகுட்டி என்பவரது தோட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட ஆயிரம் வாழை மரங்களில் 300 மரங்கள் கீழே சாய்ந்தன. அருகில் அவரது சகோதரர் பழனிசாமியின் வாழைத் தோட்டத்திலும் 300-க்கும் மேற்பட்ட வாழைமரங்கள் சேதமடைந்தன.

அதே ஊரில் குப்புசாமி என்பவர் தோட்டத்தில் 200 வாழை மரங்களும், அப்புக்குட்டி என்பவருக்கு சொந்தமான வாழைத்தோட்டத்தில் 700 வாழைமரங்களும் சேதமடைந்தன.

பி.ஆண்டிபாளையத்தில் வரதராஜ் என்பவரின் தோட்டத்தில் 500 வாழை மரங்கள் சேதமடைந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

ரூ.25 லட்சம் மதிப்பில் வாழைகள் நாசம்: காங்கயம் கடும் சூறைக் காற்று வீசியதால் ரூ.25 லட்சம் மதிப்பில் வாழை மரங்கள் நாசம் அடைந்தன.

திங்கள்கிழமை மாலை 6 மணியளவில் காங்கயம் மற்றும் அதனை சுற்றியுள்ள பொத்தியபாளையம், வடசின்னாரிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் கடும் சூறைக் காற்றுடன் மழை பெய்தது. வெகு நாள்களுக்குப் பிறகு மழை பெய்த மகிழ்ச்சி இப் பகுதி மக்களுக்கு இருந்தாலும், சில இடங்களில் வீசிய கடும் சூறைக்காற்று கடும் நாசத்தையும் விளைவித்துச் சென்றுள்ளது.

காங்கயம் அருகே பொத்தியபாளையம் ஊராட்சிக்குள்பட்ட காடையூர் பகுதியைச் சேர்ந்தவர் விவசாயி எம்.வசந்தாமணி. இவரது 6 ஏக்கர் நிலத்தில் வாழை பயிரிடப்பட்டிருந்தது. சூறைக் காற்றின் வேகத்தை தாக்குப் பிடிக்க முடியாமல் வாழை மரங்கள் அனைத்தும் அடியோடு சாய்ந்துள்ளன.

இதுகுறித்து விவசாயி எம்.வசந்தாமணி கூறியது: நேந்திரம் வகை வாழை நட்டிருந்தோம். குலை தள்ளத் துவங்கியிருந்தது. திங்கள்கிழமை இரவு வீசிய சூறைக் காற்றில் 7 ஆயிரம் வாழை மரங்களும் அடியோடு சாய்ந்து, நாசமடைந்துள்ளன. இதனால் சுமார் ரூ.25 லட்சம் ரூபாய் மதிப்பில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றார்.

### விவசாயிகளின்வங்கிக் கடனை ரத்து செய்ய வலியுறுத்தல்

வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் விவசாயத் தொழிலுக்கு பெறப்பட்ட அனைத்து வங்கிக் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என உழவர் உழைப்பாளர் கட்சி வலியுறுத்தியுள்ளது.

திருப்பூரில் உழவர் உழைப்பாளர் கட்சியின் மாநில செயற்குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கட்சித் தலைவர் கே.செல்லமுத்து தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: பன்னாட்டு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் வகையில் புதிய சட்டத்தை மத்திய அரசு தன்னிச்சையாக கொண்டுவர முயற்சிப்பதை கண்டிக்கிறோம்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் வறட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும். விவசாயத்தொழிலுக்கு பெற்ற அனைத்து  வங்கிக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். வறட்சியினால் தீவனப்பற்றாக்குறை ஏற்பட்டு கால்நடைகளைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கும் நிலையில் தீவனம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எருமைப்பால் லிட்டருக்கு ரூ.40, பசும்பால் லிட்டருக்கு ரூ.30 என பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

உழவர் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வரும் ஜூலை 5-ம் தேதி உழவர் தின மாநாடு நடத்துவது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கரும்புக்கு போதிய விலை கிடைக்கவில்லை: விவசாயிகள் புகார்

அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை கொள்முதல் செய்யாததால், கரும்புக்கு போதிய விலை கிடைக்கவில்லை என ஆட்சியரிடம் விவசாயிகள் முறையிட்டனர்.

திருப்பூர் ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் செவ்வாய்க்கிழமை ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் ரா.கஜலட்சுமி, வேளாண்மை இணை இயக்குநர் மு.முகமது கலிமுல்லா ஷெரீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் விவசாயி ஆர்.ஈஸ்வரமூர்த்தி பேசியது: அமராவதி சர்க்கரை ஆலை நிர்வாகம் முன்பதிவு செய்யப்படாத விவசாயிகளிடமும் கரும்பு கொள்முதல் செய்தது.

இந் நிலையில், சர்க்கரைச் சத்து தன்மை 9.6 சதவீதத்துக்கும் குறைவாக 6.5 சதவீதம் மட்டும் இருப்பதாகக் கூறி, அமராவதி சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு கொள்முதல் செய்வதை கடந்த 10-ம் தேதி நிறுத்திக் கொண்டது. இதனால் 5 ஆயிரம் ஏக்கரில் கரும்பு வெட்டப்படாமல் காய்ந்து வருகிறது.

தற்போது தனியார் சர்க்கரை ஆலைகள் ஒரு டன் கரும்புக்கு விலையாக ரூ.1000 மட்டும் தருகின்றன. வேறுவழியில்லாமல் கரும்பு விவசாயிகள் கிடைத்த விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், கரும்பு விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

ஆட்சியர் கோவிந்தராஜ்: அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் இத்தகைய சூழ்நிலைகளில் மாவட்ட நிர்வாகத்தின் கவனத்துக்கு பிரச்னையை கொண்டுவந்திருந்தால்

விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும். இத்தகைய சூழல் மீண்டும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளப்படும்.

விவசாயி வி.பி.ஈஸ்வரன்: அரசு கொப்பரைக் கொள்முதல் செய்வதன் மூலமாக ஒரு தென்னை மரத்துக்கு ஒரு மாதத்துக்கு ரூ.20 என்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு பயன் கிடைக்கிறது.

கொப்பரைக் கொள்முதல் செய்வதால், அரசுக்கு கூடுதல் செலவு, வேலைப்பளு உண்டாகிறது. இதற்கு பதிலாக, மாதந்தோறும் ஒரு தென்னை மரத்துக்கு ரூ.20 வீதம் அரசு மானியமாக தென்னை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும். தற்போது கொப்பரைக் கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து கொப்பரை கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இணைப்பதிவாளர் பாபு: மீண்டும் கொப்பரைக் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இனி ஒரு கிலோ கொப்பரை ரூ.52.50-க்கு கொள்முதல் செய்யப்படும் என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 29.70 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 29.70 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 103 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 400 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.13 டி.எம்.சி.

## குன்னூரில் இடியுடன் பலத்த மழை

குன்னூரில் திங்கள்கிழமை இரவு பெய்த இடியுடன் கூடிய பலத்த மழையால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெய்த பலத்த மழையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் வெளியூரில் இருந்து வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் மட்டுமன்றி, உள்ளூர் மக்களும் அவதிக்குள்ளாகினர்.

இருப்பினும், வெப்பம் தணிந்து குடிநீர் பிரச்னைக்கு தீர்வு ஏற்படும் என்பதால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மின் இணைப்புகளை சீர் செய்யும் பணிகளை மின்வாரிய ஊழியர்கள் செவ்வாய்க்கிழமை மேற்கொண்டு வருகின்றனர்.

## விவசாயிகளுக்கு நெல் சாகுபடி பயிற்சி

அட்மா திட்டத்தின் கீழ் திருந்திய நெல் சாகுபடி குறித்து, ஆரணி அருகேயுள்ள சேவூர் ரகுநாதபுரத்தில் விவசாயிகளுக்கு பண்ணைப்பள்ளி பயிற்சி அண்மையில் நடைபெற்றது .

நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் வே.சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். சேவூர் ஊராட்சி மன்றத் தலைவர் (பொறுப்பு) திருமாறன் முன்னிலை வகித்தார். உதவி வேளாண்மை இயக்குநர் ஆரோக்கியதாஸ் வரவேற்றார்.

முகாமில் பங்கேற்ற 25 விவசாயிகளுக்கு விதைத் தேர்வு மற்றும் தரம் பிரித்தல் குறித்து விளக்கப்பட்டது. விதை நேர்த்தி குறித்து செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது.

வேளாண்மை உதவி அலுவலர்கள் கண்ணபிரான், மோகன், ரமேஷ், ஆரணி சூயப் தொண்டு நிறுவன பிரதிநிதி திக்கி, வேளாண்மை மேலாளர் சதீஷ் உள்ளிட்டோர் பேசினர்.

## இன்று விவசாயிகள் மாநாடு: அமைச்சர் பங்கேற்பு

செய்யாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை (மே 22) நடைபெறும் விவசாயிகள் மாநாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் பங்கேற்க உள்ளார்.

செய்யாறு வட்டத்துக்கான 1422-ம் பசலி வருவாய் தீர்வாயத்தின் (ஜமாபந்தி) நிறைவு நாள் விழா மற்றும் விவசாயிகள் மாநாடு நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் கலந்து கொண்டு விவசாயிகள், கிராம மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.

வந்தவாசி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் வே.குணசீலன், வருவாய் தீர்வாய அலுவலர் (ஜமாபந்தி) தி.ந.பத்மஜாதேவி உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

வட்டாட்சியர் ஆ.பிரபாகரன், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் ஜெ.சேகர் மற்றும் வருவாய் துறையினர் இதற்கான ஏற்பாடுகளை செய்து உள்ளனர்.

## பரமத்தியில் உழவர் பெருவிழா நிறைவு

பரமத்திவேலூர் வட்டம், பரமத்தி வட்டார உழவர் பெருவிழாவின் நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவிற்கு பரமத்தி வட்டார அட்மா தலைவர் காளியண்ணன் தலைமை வகித்தார் விழாவில் சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்பு செட்டிற்கான மானியம், சொட்டு நீர்ப்பாசன மானியம் ஆகியவை குறித்தும், வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் பிற மானிய திட்டங்கள் குறித்தும், பரமத்தி வேளாண்மை உதவி இயக்குநர் குருலிங்கம் எடுத்துக் கூறினார்.

மேலும், நிலக்கடலைக்கு உயர் உர விதை நேர்த்தி, மண் மாதிரி எடுத்தல், மரவள்ளிக் கிழங்கு விதைக்கரணை நேர்த்தி, விசை தெளிப்பான் பற்றிய செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. அனைத்து துறைகளின் மூலம் கருத்து காட்சிகளும் அமைக்கப்பட்டிருந்தன. மேலும், அனைத்து துறைகளின் திட்டங்கள் குறித்து கலை நிகழ்ச்சிகள் மூலம் விளக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் அனைத்துத் துறைகளை சார்ந்த வேளாண்மை துறை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள், அட்மா வட்டார தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### விவசாயக் கடனை தள்ளுபடி செய்ய வலியுறுத்தல்

விவசாயிகள் பெற்ற வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் ஒன்றிய ஆலோசனைக் கூட்டம் காவேரிப்பட்டணம் சங்க அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் மத்திய மாவட்டத் துணைச் செயலாளர் ஏ.ராசா தலைமை வகித்தார்.

கூட்டத்தில் சங்கத்தின் மாநில பொதுச்செயலர் கே.எம்.ராமக்கவுண்டர் பேசினார்.

தமிழகத்தில் 31 மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அளிவித்துள்ளதால், விவசாயிகள் பெற்றுள்ள வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். கடன் தவணை கட்டத் தவறினால் விவசாயிகளின் டிராக்டர்களை ஜப்தி செய்வதை வங்கிகள் கைவிட வேண்டும்.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பாலாறு- தென்பெண்ணை ஆறு இணைப்பதற்காக நில அளவீடு செய்யும் பணியை கைவிட்டதற்கு தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் மாவட்ட மகளிரணிச் செயலாளர் மணிமேகலை, மத்திய மாவட்டத் துணை செயலாளர் வேலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் ஒன்றியத் தலைவர் பூபதி வரவேற்றார்.

## "முந்திரி சாகுபடியில் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும்'

அரியலூர் மாவட்டத்தில் முந்திரி சாகுபடியில் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, விளைச்சலை அதிகப்படுத்த வேண்டும் என்றார் தமிழக வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலரான சந்தீப் சக்சேனா.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வளர்ச்சிப் பணிகள் குறித்து அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடன் செவ்வாய்க்கிழமை ஆய்வு மேற்கொண்ட அவர் மேலும் பேசியது:

தமிழக அரசின் 2 ஆண்டு சாதனைகளை சரியான முறையில் பொதுமக்களிடையே கொண்டுசெல்ல வேண்டும். அம்மா திட்டத்தின் மூலம் ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற அரசு அலுவலர்கள் ஈடுபாடு காட்டுவதோடு, அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் முழுமையாக விரைந்து முடிக்க வேண்டும். வறட்சி நிவாரணத் திட்டங்களையும், பணிகளையும் தாமதமில்லாமல் நிறைவேற்ற வேண்டும். மழை நீரைத் தேக்கி வைக்க பண்ணைக் குட்டைகள் அமைக்க வேண்டும். தோட்டக்கலைத்துறை மூலமாக அளிக்கப்படும் சொட்டுநீர் பாசனத்தை, அனைத்து விவசாயிகளிடமும் விரிவுப்படுத்த வேண்டும். முந்திரி சாகுபடியில் புதிய தொழில் நுட்பத்தைப் ஏற்படுத்தி, விளைச்சலை அதிகரிக்க வேண்டும். தோட்டக்கலை மற்றும் வேளாண் துறை சார்பில் 100 % மானியத்தில் இடுப்பொருள்களை விவசாயிகளுக்கு விரைவாக வழங்க வேண்டும் என்றார் அவர்.

முன்னதாக, மல்லூர் கிராமத்தில் சொட்டு நீர் பாசனத்தில் அமைக்கப்பட்டுள்ள மல்லிகைத் தோட்டம், நவீன தொழில்நுட்பத்துடன் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்புத் தோட்டம், கீழப்பழூரில் உள்ள கிராம கூட்டுறவு அங்காடியில் அத்தியாவாசியப் பொருள்களின் இருப்பு ஆகியவற்றை பார்வையிட்டார்.திருமானூரில் உள்ள ஆராம்ப சுகாதார நிலையத்தை ஆய்வு செய்து குழந்தைகள் பிரிவு, அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கான அறை, பச்சிளம் குழந்தை பாதுகாப்பு அறை மற்றும் ஸ்கேன் அறைகளை ஆய்வு செய்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார் சக்சேனா.

மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் அ. கருப்பசாமி, ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் (பொறுப்பு) வசந்தி, கோட்டாட்சியர் கணபதி, வேளாண் இணை

இயக்குநர் குணசேகரன், தோட்டக்கலை துணை இயக்குநர் சுப்பையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மே 24}ல் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம்

கரூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் முகாம் வரும் 24-ல் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் இலவச வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2011-12-ல் 1,842 பேருக்கு 7,368 ஆடுகள், 2012-13-ல் 3,003 பயனாளிகளுக்கு 12,012 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆடுகள் 8,400 குட்டிகளை ஈன்றுள்ளன.

பயனாளிகள் தங்கள் கால்நடைகளை 2 ஆண்டுகள் விற்காமல் நன்கு பராமரித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆடுகளின் எடையை அதிகரிக்கவும், அதிகக் குட்டிகளை ஈன்றிடவும் வரும் மே 24, 25-களில் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களால் 63 ஊராட்சிகளிலும் குடற்புழு நீக்க முகாம், ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

எனவே இந்த முகாமில், இலவச கால்நடை பெற்ற பயனாளிகள் மட்டுமல்லாமல் அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களது கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து கொள்ளலாம்.

### வறட்சி நிவாரணம்: விவசாயிகள் புகார்

பயிர் செய்யாத விவசாயிகளுக்கும் அரசின் வறட்சி நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

வறட்சி பாதிப்புக்கு நிவாரணம் வழங்க அரவக்குறிச்சி வட்டாரப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் வறட்சியால் 50 சதம் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் புள்ளிவிவரம் விஏஓக்களால் சேகரிக்கப்பட்டு, கடந்த ஒரு வாரமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டது.

இந்நிலையில் புங்கம்பாடி மேல்பாகம், கீழ்பாகத்தில் உள்ள விவசாயிகள் பலரும் தங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை.

இந்தப் புள்ளிவிவரத்தை அலுவலர்கள் தன்னிச்சையாகச் சேகரித்துள்ளனர். உண்மையாகப் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. வசதி படைத்தோருக்கு நிவாரணம் கிடைத்துள்ளது எனக் கூறி அரவக்குறிச்சி வேளாண் துணை இயக்குநர் கைலாசபதியிடம் புகார் மனு அளித்தனர்.

இதுகுறித்து கைலாசபதி கூறியது: வறட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இப்போது அனைத்து விவசாயிகளும் தங்களுக்கு நிவாரணம் வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளனர். இதற்கு அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## தேனீ வளர்ப்பால் வருமானம் உயரும்'

விளைநிலங்களில் தேனீ வளர்ப்பதனால் விவசாயிகளின் வருமானம் பன்மடங்காகும் என்றார் தமிழ்நாடு வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் க. வைரவன்.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை தேனீ வளர்ப்பு பயிற்சியைத் தொடக்கி வைத்து அவர் பேசியது:

உலகம் முழுவதும் பலவகையான தேனீக்கள் இருந்தாலும் நமது சூழ்நிலைக்கு இந்தியத் தேனீ, இத்தாலியத் தேனீ, கொசுத் தேனீ வகைகளே ஏற்றவையாக உள்ளன.

மலர் உற்பத்தி அதிகரிக்கும் டிசம்பர் - ஏப்ரல் வரை தேன் உற்பத்தி அதிகரிக்கிறது.

செப்டம்பர் - நவம்பர் வரை மழைக் காலம் என்பதால் தேன் உற்பத்தி குறையும்.

மிகச் சிறந்த ஊட்டச்சத்து உணவாகவும், நோய்களை குணப்படுத்துவதாகவும் தேன் திகழ்கிறது. தேனீக்கள் இல்லையேல் அயல்மகரந்தச் சேர்க்கை தடைபட்டு, பயிர் மலடாகி விவசாய உற்பத்தி பாதிக்கப்படும்.

விவசாய நிலத்தில் தேனீப் பெட்டிகளை வைத்து பயிர்களின் விளைச்சலைக் கூட்டுவதுடன் இதை முழுநேரத் தொழிலாகச் செய்வோர் ஏக்கருக்கு 50 பெட்டிகள் வைத்தால் ஒவ்வொரு மாதமும் 100 கிலோ தேனைப் பெறலாம்.

தேனீ வளா0க்கும்போது பயிர்களுக்கு ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

தேனீ விஷப் பூச்சி அல்ல. இவை கொட்டினால் முடக்குவாதம், நரம்பு தளர்ச்சி உள்ளிட்ட நோய்களுக்கு நிவாரணியாகவும் உள்ளது.

வேளாண் சந்தையில் தேனீப் பெட்டியின் விலை ரூ.1000. தேன் எடுக்கும் இயந்திரத்தின் விலை ரூ. 800, தேனீக்களை விரட்டப் பயன்படும் புகைப்பானின் விலை ரூ. 300, ஒரு மாதத்திற்கு 50 பெட்டிகளிலிருந்து 100 கிலோ வரை தேன் கிடைக்கும். இதன் மூலம் மாதம் ரூ. 20,000 வரை வருமானம் கிடைக்கும்.

மேலும், தேன் மெழுகு, தேன் பால், தேன் பிசின் போன்ற பல பொருட்களும் கிடைக்கின்றன.

ஆர்வமுள்ளோர் இந்நிலையத்தை அணுகலாம் என்றார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேனீ வளர்ப்பில் வெற்றியாளர்களாகத்

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 20.32 அடியாக இருந்தது. அணைக்கு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 20.32 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 91 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி: தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு

தென் தமிழகக் கடலில் புதிய குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தின் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெலங்கானாவிலிருந்து தென் தமிழகக் கடல் பகுதி வரை குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இதைத் தவிர தென்கிழக்கு அரபிக் கடலில் கேரளத்துக்கு அருகே ஒரு புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

இதன் காரணமாக தமிழகம், கேரளம் மற்றும் ஆந்திர மாநிலங்களில் மழை பெய்யக் கூடும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. தாழ்வு நிலை வலுவடையும் பட்சத்தில் அடுத்த சில நாள்களுக்கு மழை தொடரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

சில நாள்களுக்கு முன்பு வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அது வலுவடைந்து மகாசேன் புயலாக மாறியது. இதனால் தமிழகத்தில் மழை பெய்யும் என எதிர்பார்த்திருந்த நிலையில், புயல் திசை மாறி மியான்மர் அருகே கரையைக் கடந்தது.

இந்த நிலையில் புதிதாக காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகி உள்ளதால் அடுத்த சில நாள்களுக்கு தமிழகத்தில் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே வெப்பச் சலனம் காரணமாக தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், தேனி, கோவை, திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், நீலகிரி உள்ளிட்ட இடங்களில் திங்கள்கிழமை மாலை மற்றும் செவ்வாய்க்கிழமை காலையில் மழை பெய்தது.

குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் சில இடங்களில் புதன்கிழமை (மே 22) மழை பெய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### சூறாவளி காற்றுடன் கனமழை:வாழைப்பயிர் சேதம்

ஆம்பூரில் திங்கள்கிழமை மாலை பெய்த கன மழைக்கு வாழை பயிர்கள் சேதம் அடைந்துள்ளன.

ஆம்பூரில் திங்கள்கிழமை மாலை இடி, மின்னல் மற்றும் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. இதனால், பல இடங்களில் ஆஸ்பெட்டாஸ் கூரைகள் காற்றில் பறந்து சென்று கீழே விழுந்து உடைந்தன.

தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கியது. ஆங்காங்கே மரங்கள் முறிந்து விழுந்தன.

ஆம்பூர் சான்றோர்குப்பம் பகுதியில் அறிவழகன் என்பவரின் வாழைத்தோப்பு சூறாவளி காற்றால் சேதமடைந்தது. பல வாழை மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. இதே ஆம்பூரின் சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறு கிராமங்களிலும் வாழை மரங்கள் சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் கூறினர்.

இன்றைய வேளாண் செய்திகள்

22.05.2013 A.M

## சம்பங்கி, கனகாம்பரம் விலை உயர்வுமுகூர்த்தத்தால் விவசாயிகள் மகிழ்ச்சி

திண்டுக்கல்:அடுத்தடுத்து முகூர்த்த நாட்கள் இருப்பதால் இதுவரை இல்லாத அளவிற்கு சம்பங்கி மற்றும் கனகாம்பர பூக்கள் கிலோ ரூ. 400 க்கு திண்டுக்கல் சந்தையில் விற்பனை செய்யப்பட்டன.திண்டுக்கல் பூ மார்க்கெட்டை நம்பி, மாவட்டத்தில் ஏராளமான விவசாயிகள் பல்வேறுவகையான பூக்களை விளைவித்து வருகின்றனர். அனைத்து நாட்களிலும் மல்லி, முல்லை, ரோஜா பூக்களைத்தான் வாடிக்கையாளர்கள் விரும்பி வாங்குவர். தற்போது முகூர்த்த நாட்கள் என்பதால் மாலை கட்டுவதற்காக சம்பங்கி பூக்கள் அதிக அளவில் விற்பனையாகி வருகின்றன. கடந்த வாரம், கிலோ ரூபாய் 120 வரை விற்கப்பட்ட சம்பங்கி, தற்போது கிலோ ரூபாய் 400 க்கு விற்கப்படுகிறது. அதேப்போன்று, ரூபாய் 120 க்கு விற்கப்பட்ட கனகாம்பரம், முகூர்த்தத்தை முன்னிட்டு ரூபாய் 400 க்கு விற்கப்பட்டது.

மாலையோடு இணைக்கப்படும் செண்டுமல்லி, கோழிக்கொண்டை பூக்களுக்கும் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. கோழிகொண்டை கிலோ ரூ.120 க்கும், செண்டுமல்லி கிலோ ரூபாய் 150 க்கும் விற்கப்பட்டது.மகிழ்ச்சி: மல்லி, முல்லை பூக்கள் வரத்து இல்லாததால் கிலோ ரூபாய் 200-க்கு விற்கப்படுகிறது. அரளி ரூபாய் 60 க்கும், ரோஜா ரூபாய் 80 என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வைகாசி இறுதிவரை பூக்களின் விலை குறைவதற்கான வாய்ப்பு இல்லை என வியாபாரிகள் தெரிவித்தனர். விலை உயர்வு காரணமாக சம்பங்கி, கனகாம்பரம் உற்பத்தி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கம்பம் விவசாயிகளுக்கு பரிசு மழை

கம்பம்:கொடைக்கானலில் நடைபெற்ற 52 வது மலர் கண்காட்சியில், கம்பம் பகுதி விவசாயிகளுக்கு, மூன்று முதல் பரிசுகளும், ஒரு இரண்டாம் பரிசும் கிடைத்தது. தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்பட்டன.கொடைக்கானலில், ஆண்டுதோறும் மலர் கண்காட்சி நடைபெறும். இதில் பல்வேறு போட்டிகள் நடைபெறும். இந்த ஆண்டு திராட்சை, வாழை, பப்பாளி பயிர்களில்

சிறப்பாக சாகுபடி செய்து, தரமான பழங்களை விளைவித்த காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி விவசாயிகளுக்கு நான்கு பரிசுகள் கிடைத்தன. முதல் பரிசுகள் மூன்றும், ஒரு இரண்டாம் பரிசும் கிடைத்தது. இதற்கான கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களை, கம்பம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் ராஜன், தோட்டக்கலை அலுவலர் மனோகரன் ஆகியோரிடம் வழங்கினார்கள். விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை எடுத்துரைத்து, வழிகாட்டிய அதிகாரிகளும் பாராட்டப்பட்டனர்.

## சிறு,குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன கருவிக்கு ரூ.2 லட்சம் மானியம் : துணை இயக்குனர் தகவல்

சிவகங்கை:""மாவட்டத்தில், காய்கறி உற்பத்தியை அதிகரிக்க, விவசாயிகளுக்கு முழு மானியத்தில் சொட்டு நீர் பாசன கருவி வழங்கப்படும்," என, தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார்.அவர் கூறியதாவது:

தோட்டக்கலை பயிர் உற்பத்தியை அதிகரிக்க, மாநில அரசு, முழு மானியத்தில், விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன கருவிகளை, வேண்டிய அளவு வழங்க உத்தரவிட்டுள்ளது. இதற்காக, சிறு, குறு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.43 ஆயிரத்து 816 முழு மானியத்தில், அதிக பட்சம் 5 எக்டேர் வரை (12.5 ஏக்கர்) முழு மானியத்தில்,சொட்டு நீர் பாசன கருவிகள் பொருத்தி தரப்படும்.

அதிக பட்சமாக ரூ.2 லட்சம் வரை மானியம் கிடைக்கும். சிறு, குறு விவசாயிகளுக்கு அதிக பட்சம் 12.5 ஏக்கர் வரை மட்டுமே முழு மானியத்தில், சொட்டு நீர் பாசன கருவி வழங்கப்படும். பெரிய அளவிலான விவசாயிகள், மா, பலா, கொய்யா போன்ற தோட்டக்கலை செடிகளை நடவு செய்து, அதற்கு சொட்டு நீர் பாசனம் மூலம், தண்ணீர் பாய்ச்ச நினைக்கும், விவசாயிகளுக்கு, சொட்டு நீர் பாசனம் அமைக்கும் பரப்பின் அடிப்படையில், 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன கருவிகள் வழங்கப்படும். எத்தனை விவசாயிகளுக்கு வேண்டுமென்றாலும், போதிய அளவு சொட்டு நீர் பாசன கருவி வழங்கப்படும். எனவே, விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலை அலுவலரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம், என்றார்.

## உழவர் பெருவிழாவில் விழிப்புணர்வு பேரணி

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் தாலுகா சிறுகனூரில் உழவர் பெருவிழாவை முன்னிட்டு பாரம்பரிய பொருட்கள் பயன்படுத்துவது குறித்து விழிப்புணர்வு பேரணி நடந்தது.
திருச்சி மாவட்டம் சிறுகனூர் டவுன் பஞ்சாயத்து தலைவர் ரமேஷ் தலைமை வகித்தார். திருச்சி

வேளாண்மை துணை இயக்குனர் சேகர் விழாவின் நோக்கம் குறித்து பேசினார்.

தோட்டக்கலை துறை உதவி அலுவலர் ராஜேந்திரன், விதைச்சான்று அலுவலர் ரெங்கராஜ், சிறுகமணி வேளாண் பயிற்சி மைய உதவி பேராசிரியர் பொறியியல் துறை செல்வராஜ் பங்கேற்றனர்.

வேளாண் பொறியியல் துறை தமிழ்செல்வன், வேளாண் உதவி இயக்குனர் ஜெயபாலன் ஆகியோர் மண்மாதிரிகள் எடுப்பது குறித்தும், வேளாண்மையில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்ப செயல்விளக்கங்கள் செய்து காட்டினர்.

வேளாண் துறைச்சார்ந்த கலை நிகழ்ச்சிகளும், மண்மாதிரி எடுப்பதன் நோக்கம் பற்றி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பாரம்பரிய பொருட்களான இளநீர், பருத்தி ஆடை, சீயக்காய் பயன்படுத்துவது பற்றி விழிப்புணர்வு பேரணி நடந்தது.

வேளாண் உதவி அலுவலர்கள் பிச்சைப்பிள்ளை, துரைசங்கர், ஜீவானந்தம், அட்மா தொழில் நுட்ப அலுவலர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## கண்ணீர்!தென்னை பயிரிட்ட விவசாயிகள்... மணல் கொள்ளையால் பரிதாபம்

கரூர்: கரூர் மாவட்டத்தில் உள்ள காவிரியாற்று பகுதியில், நன்னியூர், நெரூர் வடபாகம், கடம்பங்குறிச்சி, அச்சமாபுரம், ராஜேந்திரம், திருக்காம்புலியூர், வைகைநல்லூர் ஆகிய பகுதிகளில் மணல் அள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு, மணல் எடுப்பது தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகளை, மதுரை உயர்நீதிமன்றம் விதித்தது.

ஆனால் உயர்நீதிமன்றம் உத்தரவு காற்றில் பறக்க விட்டு, மாயனூர் முதல், பெருகமணி வரை, தடையில்லாமால் மணல் கொள்ளை நடந்து வருகிறது.

இதை பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்துறையினர் வேடிக்கை பார்த்து வருகின்றனர். இது ஒருபுறமிருக்க, கரூர் மாவட்டத்தில் தென்னை சாகுபடி, நான்காயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நடந்து வந்தது. இதற்கு தண்ணீர் அதிகளவு தேவை என்பதால், காவிரி ஆற்று படுகையில், பெரும்பாலும் பயிரிடப்பட்டு வந்தது. ஆனால் இப்பகுதியில் மணல் திருட்டின் காரணமாக, நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து, தென்னை மரங்கள் அழியும் சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

இதுகுறித்து வேளாண் அதிகாரி கூறியதாவது:

இரண்டு அடி ஆழம், நூறு அடி நீளம் வரை, தென்னை வேர், தனக்கு தேவையான தண்ணீரை தேடி ஊறிஞ்சி கொள்ளும் திறன் கொண்டது. அதன், வேர் அதிக நீளம் செல்லக்கூடியதே தவிர,

அதிக ஆழம் செல்ல முடியாது. மேலும் தென்னை மரத்துக்கு ஒரு நாளைக்கு, 50 லிட்டர் வரை தண்ணீர் தேவைப்படுகிறது.

காவிரி ஆற்றுப்படுகையில் அளவில்லாமல் மண் அள்ளப்படுவதால், நிலத்தடி மட்டம் அதல பாதளத்துக்கு சென்று கொண்டிருக்கிறது. தென்னை மரங்கள், தனக்கு தேவையான நீரை ஊறிஞ்ச முடியாததால், அவைகள் கருகும் அபாயநிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மேலும் ஒரு தென்னை மரம் பட்டு போய்விட்டால், மீண்டு துளிர்க்க வாய்ப்பு மிகவும் குறைவாகும்.

தென்னை மரம் நீண்டகாலம் பலன் கொடுக்கும் பயிர் என்பதால், விவசாயிகளுக்கு தாங்க முடியாத நஷ்டம் ஏற்படும்.

ஆற்று பகுதிகளில், 15 அடி ஆழம் வரை மணல் பொக்லைன் மூலம் அள்ளப்படுகிறது. ஆதலால், 10 அடியில் தண்ணீர் கிடைத்த நிலை மாறி, 250 அடிக்கு போர்வெல் அமைத்தால் கூட நிலத்தடி நீர் கிடைக்கவில்லை. வெள்ள நேரங்களில் மணல் அரிப்பை தடுத்து, தண்ணீர் செல்லும் வேகத்தை மரங்கள் குறைக்கும். ஆனால் ஆற்றின் ஓரங்களில் மரங்கள் கோடையின் வெப்பத்தை தாங்கும் சக்தி கொண்ட பனை உட்பட பெரும்பாலன மரங்கள் கருகி வருகின்றன. அளவுக்கு மீறி மணல் அள்ளப்படுதாலும், மரங்கள் கருகி வருவதாலும், வெள்ள காலங்களில் ஊருக்குள் வெள்ளநீர் புகும் அபாயம் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர் மணல் கொள்ளையால், விவசாய உற்பத்தி பாதிப்பதோடு, மிகப்பெரிய சுற்றுச்சுழல் மாசுப்பாட்டை ஏற்படுத்தும். எனவே பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் அலட்சியம் காட்டாமல், மணல் அள்ளுவதை முறைப்படுத்த வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## சாலூரில் மணக்கும் முல்லை சாகுபடி: 10 ஆண்டுகளுக்கு பயன் கிடைக்கும்

திருக்கழுக்குன்றம் : திருக்கழுக்குன்றம் ஒன்றியம், சாலூர் கிராமத்தில், மலர் சாகுபடி அதிகரித்து வருகிறது. குறிப்பாக, விவசாயிகள் பலர், முல்லை பூ சாகுபடியில் இறங்கி உள்ளனர். இது குறித்து, விவசாயி சுந்தரமூர்த்தி கூறியதாவது: ஒரு ஏக்கரில், முல்லை பூச்செடி பயிர் செய்துள்ளேன். செடிகளை நடுவதற்கு முன்பு, நிலத்தை நன்கு உழுது தயார் செய்ய வேண்டும். செஞ்சால் உழவுக்கு பிறகு, கால்வாய் அமைக்க வேண்டும். பின், 6 அடி இடைவெளி விட்டு ஒரு அடி ஆழம் குழிவெட்டி, அதில் மக்கிய தொழு உரம், ரசாயன உரம், பயோ குருணை ஆகியவைகளை கலந்து இட வேண்டும். பின்பு, செடிகளை நடவு செய்ய வேண்டும். ஒரு

ஏக்கருக்கு, 3,000 செடிகள் தேவைப்படும்.

நட்ட மூன்று மாதத்தில், செடிகள் பூக்க தொடங்கும். படிப்படியாக, பூக்கள் பூப்பது அதிகரிக்கும். தொடர்ந்து, பத்து ஆண்டுகளுக்கு பலன் தரும். முதல் ஆண்டில், 35 ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். அடுத்த ஆண்டு செலவு குறையும். தினமும், 30 கிலோ வரை பூக்கும்.

சராசரியாக மாதத்திற்கு, 1,000 கிலோ கிடைக்கும். செலவுகள் போக, மாதம், 20 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கிறது

## வவ்வால்களுக்கு விருந்தாகும் மாம்பழங்கள் :குத்தகைதாரர்கள் கவலை

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், பழுக்கும் நிலையில் உள்ள மாம்பழங்களை, வவ்வால்கள் பதம் பார்த்துவிடுதால், குத்தகைதாரர்கள் கவலை அடைந்து உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், உத்திரமேரூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மதுராந்தகம், செய்யூர் உள்ளிட்ட நகரங்களை சுற்றியுள்ள கிராமப்புறங்களில், ஏராளமான மாந்தோப்புகள் உள்ளன.

குத்தகை

ஒவ்வொரு ஆண்டும், மாந்தோப்புக்களை குத்தகைக்கு விடுகின்றனர். மாம்பழங்கள் காய்த்து முடியும் வரை, தோப்பு குத்தகைதாரர்கள் பராமரிப்பில் இருந்து வரும். மாம்பழங்கள், மரத்திலேயே பழுத்து வருகின்றன.

வவ்வால்கள்

இந்நிலையில், நள்ளிரவில், படை படையாக வரும் வவ்வால்கள், மாந்தோப்புக்களில் புகுந்து, அறுவடைக்கு தயாராக இருக்கும் மாங்காய்களை உண்டு விட்டு செல்கின்றன. இதனால், குத்தகை எடுத்துள்ளவர்களுக்கு, பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து, குத்தகைதாரரான, முசரவாக்கத்தை சேர்ந்த சர்புதீன், 52. கூறியதாவது:

பங்கனப்பள்ளி, பெங்களூரா ஆகிய ரக பழங்கள், தற்போது மரத்திலேயே பழுக்க துவங்கிவிட்டது. இவைகளை தினமும் பறித்து மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்று வருகிறோம்.

ஆனால், இரவில் வவ்வால்கள் கூட்டம் கூட்டமாக வந்து, மாம்பழங்களை "பதம்' பார்த்து விடுகின்றன. இதனால், ஒரு நாளைக்கு, 10 கிலோ மாம்பழம் வீணாகி வருகிறது. வேளாண்மைத் துறை அதிகாரிகள் உரிய ஆலோசனை வழங்க வேண்டும் என, எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு, அவர் கூறினார்.

## வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு கை கொடுக்கும் கரி உற்பத்தி தொழில்

தாரமங்கலம்: சேலம் உட்பட, தமிழகத்தின் முக்கிய நகரங்களில் தாபா ஹோட்டல்களில், அடுப்பு கரிக்கு மவுசு அதிகரித்துள்ளது. வறட்சியின் காரணமாக விவசாயம் கை விரித்து விட்ட நிலையில், கரி உற்பத்தியை மாற்றுத் தொழிலாக, விவசாயிகள் கையில் எடுத்துள்ளனர்.

தமிழகத்தில் பெரும்பாலான ஹோட்டல்கள், டீ கடைகள் காஸ் சிலிண்டருக்கு மாறி விட்ட நிலையில், இன்றளவும் தாபா ஹோட்டல்களில் அடுப்பு கரியின் பயன்பாடு நீடிக்கிறது. லாரி தொழில் கொடி கட்டி பறக்கும் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், கோவை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் அதிக அளவில் தாபா ஹோட்டல்கள் செயல்படுகின்றன. இந்த ஹோட்டல்களில், அடுப்பு கரியை பயன்படுத்தியே உணவுப் பொருட்களை தயாரிக்கின்றனர்.

தமிழகத்தில் வறட்சி காரணமாக, விவசாயம் பொய்த்து விட்ட நிலையில், விவசாயிகள், வாழ்வாதாரத்துக்காக அடுப்பு கரி உற்பத்தி தொழிலுக்கு மாறி வருகின்றனர்.

சேலம் மாவட்டம் தாரமங்கலம், ஓமலூர், இரும்பாலை, சங்ககிரி, இடைப்பாடி பகுதிகளில், விவசாயிகள் இத்தொழிலில் களம் இறங்கி உள்ளனர். ஒரு டன் விறகு, 2,300 முதல், 2,500 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கும் கரி உற்பத்தியாளர்கள், ஐந்து லிட்டர் கொள்ளவு கொண்ட டின், 75 முதல், 100 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர். தாரமங்கலம் அணைமேட்டை சேர்ந்த முத்து கூறியதாவது:

தமிழகத்தில் மழை இன்றி பொய்த்து விட்ட நிலையில், விவசாயிகளுக்கு, கரி தயாரிப்பு தொழில் கை கொடுத்து வருகிறது. தாபா ஹோட்டல்கள், டீ கடைகளுக்கு மட்டுமின்றி துணிகளை இஸ்திரி செய்யும் கடைகள், லேத் பட்டறைகள் ஆகியவற்றுக்கும் கரி சப்ளை செய்யப்படுகிறது. தற்போது, சேலம் மாவட்டத்தின் வறட்சி பகுதிகளில் கரி தயாரிப்பு தொழில் சூடு பிடித்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## 2.700 பருத்தி மூட்டைகள் ரூ.45 லட்சத்துக்கு ஏலம்

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டையில் உள்ள, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள், எண்ணெய் வித்து மற்றும் தானியங்கள் ஏலம் நடந்து வருகிறது.

நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், ஆத்தூர், தலைவாசல், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், பெரம்பலூர், திட்டக்குடி பகுதியை சேர்ந்த, 220 விவசாயிகள், 2,700 மூட்டை பருத்தியை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஆத்தூர், கோவை, திருப்பூர், திருச்சி பகுதியை சேர்ந்த, 17 வியாபாரிகள் கலந்து கொண்டு, பருத்திக்கு விலை நிர்ணயம் செய்தனர். அதன்படி, பி.டி., ரக பருத்தி குவிண்டால் அதிகபட்சம், 4,966 ரூபாய், குறைந்தபட்சம், 4,484 ரூபாய், டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சம், 5,266 ரூபாய், குறைந்தபட்சம், 4,846 ரூபாய் என, விற்பனையானது. 2,700 பருத்தி மூட்டைகள், 45 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 283 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 283 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நீண்ட இடைவெளிக்கு பின், முட்டை விலை ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 280 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, மூன்று காசுகள் ஏற்றம் கண்டு, 283 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நீண்ட இடைவெளிக்கு பின், முட்டை விலை மூன்று காசுகள் ஏற்றம் கண்டிருப்பது, பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 285, பெங்களூரு, 275, மைசூரு, 283, ஹைதராபாத், 232, மும்பை, 268, விஜயவாடா, 240, கோல்கத்தா, 285, பர்வாலா, 237, டில்லி, 248.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 68 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## ஆந்திரா மாம்பழங்கள் வீதிகளில் கூவி விற்பனை விலை குறைவால் வரவேற்பு

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், உற்பத்தி குறைவால் ஆந்திரா மாநில மா அதிகளவு விற்பனைக்கு குவிந்துள்ளது. வீதிகளில் போட்டு அடிமாட்டு விலைக்கு கூவி, கூவி விற்பனை செய்வதால், கிருஷ்ணகிரி மா விவசாயிகள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அதிகளவு மா உற்பத்தியாகிறது. மாவட்டத்தில் ஓசூர், மத்தூர், ஊத்தங்கரை, போச்சம்பள்ளி, பர்கூர், காவேரிப்பட்டணம், சூளகிரி உள்பட பரவலாக ஒரு லட்சத்து, 30 ஆயிரம் ஏக்கரில் மா சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இங்கு உற்பத்தியாகும் பெங்களூரா, செந்தூரம், அல்போன்சா, பீத்ரா, பாதாமி, மல்லிகா, பங்கனபள்ளி, தோத்தாபூரி உள்ளிட்ட, 35 வகை "மா'தான், தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வடமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும்.

கிருஷ்ணகிரி மா தரத்திலும், சுவையிலும் மேலோங்கி காணப்பட்டதால், சந்தைகளில் நல்ல வரவேற்பு பெற்றது. கடந்த இரண்டாண்டாக பருவமழை பொய்த்தது. நடப்பாண்டும் பருவ மழை ஏமாற்றம் தொடர்ந்ததால், நிலத்தடி நீர் மட்டம் வீழ்ச்சியடைந்தது. மா மரங்களில் மாங்காய்கள் வழக்கத்திற்கு மாறாக அதிகளவு காய்த்து குலுங்கினாலும், குறைந்தளவு காய்களே அறுவடை

பருவத்தை அடைந்தன.

மற்றவை போதிய நீர் ஆதாரம் கிடைக்காமல் அறுவடைக்கு வரும் முன்பே வெதும்பி கீழே விழுந்தன. சமீபத்தில் பெய்த ஆலங்கட்டி மழை, சூறைகாற்றால் மரத்தில் தொங்கிய காய்களும், உதிர்ந்து கீழே விழுந்தன. ஆயிரக்கணக்கான மரங்கள், தண்ணீர் இல்லாமல் பட்டுவிட்டதால், அவற்றை விவசாயிகள் வெட்டி அப்புறப்படுத்தினர்.

அதனால், நடப்பாண்டு உற்பத்தி குறைந்தது. அறுவடை செய்த மாவும் தரமில்லாமல் உள்ளூர் சந்தைகளில் கூட வரவேற்பு இல்லை. சுவையும் இல்லாததால், இந்த ஆண்டு மா சீசன் இதுவரை களைகட்ட துவங்கவில்லை.

இதனால், உள்ளூர் மா வியாபாரிகள் நடப்பாண்டு, சுவையில்லாத உள்ளூர் மாவை புறக்கணித்துவிட்டு, ஆந்திராவில் இருந்து அதிகளவு "மா'வை இறக்குமதி செய்து, சந்தைகள், பழக்கடைகளில் விற்பனை செய்ய துவங்கியுள்ளனர்.

ஆந்திரா மா தோட்டங்களில் கொள்முதல் செய்து இறக்குமதி செய்யப்படும், முதல் ரக பழங்களை, வியாபாரிகள் ஓசூரில் இருந்து, தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

இரண்டாம், மூன்றாம் ரக மாவை, உள்ளூர் வியாபாரிகள், தெருக்கள், வீதிகளில் போட்டு கூவி, கூவி விற்பனை செய்கின்றனர். ஒரு கிலோ, 20 ரூபாய் முதல், 30 ரூபாய்க்கு விற்பனை செய்வதால், கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர்.

ஏற்கனவே, தண்ணீர் இல்லாமல் மகசூல் குறைந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், தற்போது, ஆந்திரா மா வருகையால் பெரும் நஷ்டமடைந்துள்ளனர். ஆந்திராவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் "மா'வை ஒரு சில நியானமான வியாபாரிகளை தவிர, மற்றவர்கள் குடோன்களில் போட்டு விற்பனை செய்கின்றனர்.

ஆந்திரா மா, கிருஷ்ணகிரி மாவை விட தரமாகவும், சுவையாகவும், கூடுதல் எடையுனுடன் காணப்படுவதால், சந்தைகளில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

### திருப்பூருக்கு வறட்சி நிவாரணம் ஒதுக்கீடு ரூ.77 கோடி :விடுபட்டோர் விண்ணப்பிக்க அழைப்பு

திருப்பூர்:""திருப்பூர் மாவட்டத்தில், ஒரு லட்சத்து 53 ஆயிரத்து 103 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க, 77 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; விடுபட்டவர்கள், தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்,'' என கலெக்டர் கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் போதிய மழைப்பொழிவு இல்லாததால், வறட்சி காரணமாக, இறவை பயிர் மற்றும் மானாவாரி பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டது. வருவாய்த்துறை அடங்கல் ஆவணம் மற்றும் வேளாண் துறை புள்ளிவிவரங்களை கொண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கண்டறியப்பட்டனர். மாவட்ட அளவில், ஒரு லட்சத்து 53 ஆயிரத்து 103 விவசாயிகள்

வறட்சியால் பாதிக்கப்பட்டது தெரியவந்தது.

தென்னை மற்றும் இறவை சாகுபடி விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு 4,000 ரூபாய், மானாவாரி விவசாயிகளுக்கு 3,000 ரூபாய் நிவாரணம் வழங்க, தமிழக அரசு நிதி ஒதுக்கியுள்ளது. உடுமலை மற்றும் மடத்துக்குளம் தாலுகாக்களில், அதிகப்படியான தென்னை மரங்கள் வறண்டுள்ளதால், அவ்விரண்டு தாலுகா விவசாயிகளுக்கு மட்டும் 34 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. நேற்று நடந்த விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில், வறட்சி நிவாரணம் தொடர்பாக, விவசாயிகள், பல்வேறு புகார்களை முன்வைத்தனர்.விவசாயிகள் பேசியதாவது:தமிழக அரசு, திருப்பூர் மாவட்டத்துக்கு 77 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளதற்கு நன்றி. இருப்பினும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, முழு அளவுக்கு
நிவாரணம் கிடைக்குமா என சந்தேகம் எழுந்துள்ளது. நான்கு ஏக்கர் விவசாயம் செய்திருந்தால், ஒரு ஏக்கருக்கும் குறைவாக மட்டுமே சில இடங்களில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.
நிவாரணம் பெறும் விவசாயிகளின் விவரம் இதுவரை வெளியிடப்படவில்லை.
நிவாரணம் கிடைக்குமா, கிடைக்காதா என கவலை அடைந்துள்ளனர். அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களிலும்,
நிவாரணம் பெறும் விவசாயிகள் பட்டியலை பார்வைக்கு வைக்க வேண்டும். அடங்கல் ஆவண பராமரிப்பு முறையாக இல்லாததால், எவ்வாறு நிவாரணம் கணக்கிடப்பட்டிருக்கும் என்று அச்சமாக இருக்கிறது. மாவட்ட நிர்வாகம் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் பெற்றுத்தர வேண்டும், என்றனர்.கலெக்டர் கோவிந்தராஜ் மற்றும் டி.ஆர்.ஓ., கஜலட்சுமி ஆகியோர் விவசாயிகளுக்கு பதில் அளித்தனர். அப்போது,
"24 கோடி ரூபாய்க்கு நிவாரணம் வழங்க, விவசாயிகள் பட்டியல் தயாராகிவிட்டது.
முதல்கட்டமாக, பாதிக்கப்பட்ட இடங் களை தேர்வு செய்து, அதன்பின், பயனாளிகள் கண்டறியப்பட்டு வருகின்றனர். வங்கி கணக்கு இல்லாத விவசாயிகள், கணக்கு துவங்கி வருகின்றனர். நிவாரணம் கிடைக்காமல் விடுபட்டவர்கள், அந்தந்த தாலுகா அலுவலகங்களில் மனு செய்து பயனடையலாம். தாலுகா மற்றும் கிராம நிர்வாக அலுவலகங்களில், விவசாயிகள் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும்,' என்றனர்.தென்னை மற்றும் இறவை சாகுபடி விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு 4,000 ரூபாய், மானாவாரி விவசாயிகளுக்கு 3,000 ரூபாய் நிவாரணம் வழங்க, தமிழக அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

## முட்டை விலை 283 காசாக நிர்ணயம்



நாமக்கல் : தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 283 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. கூட்டத்தில், முட்டை விலை, 283 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நீண்ட இடைவெளிக்கு பின், முட்டை விலை மூன்று காசுகள் ஏற்றம் கண்டிருப்பது, பண்ணையாளர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 285, பெங்களூரு, 275, மைசூரு, 283, ஹைதராபாத், 232, மும்பை, 268, விஜயவாடா, 240, கோல்கத்தா, 285, பர்வாலா, 237, டில்லி, 248. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 68 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## குன்னூரில் தேயிலை ஏலம் ; பாகிஸ்தான் வர்த்தகர்கள் பங்கேற்பு



குன்னூர் : தேயிலை ஏலத்தில், நீண்ட இடைவெளிக்குப் பின், பாகிஸ்தான் வர்த்தகர்கள் பங்கேற்றனர். நீலகிரி தேயிலை ஏல விற்பனையில், சி.டி.சி., ரக தேயிலையை, பாகிஸ்தான், அதிகளவில் கொள்முதல் செய்கிறது. 2015ம் ஆண்டு வரை, 5,000 கோடி கிலோ தேயிலை தூள் ஏற்றுமதி செய்ய, பாகிஸ்தானுடன், தென்னிந்திய வர்த்தகர்கள் ஒப்பந்தம் செய்துள்ளனர். கடந்த ஆண்டு டிசம்பரில், காஷ்மீர் எல்லையில் நடந்த அசம்பாவித சம்பவத்துக்கு பின், இந்தியா - பாகிஸ்தான் உறவில், சிக்கல் ஏற்பட்டது. இதனால், இந்தியாவிலிருந்து பொருட்களை கொள்முதல் செய்ய, பாகிஸ்தான் வர்த்தகர்கள், தயக்கம் காட்டினர். இந்நிலையில், பாகிஸ்தானில் புதிய அரசு பொறுப்பேற்றுள்ளதால், உறவில் புதிய நிலை ஏற்படும் என, எதிர்பார்க்கப்பட்டது. இது, தேயிலை வர்த்தகத்தில், எதிரொலிக்க துவங்கியுள்ளது. இதை உறுதி செய்யும் வகையில், நீண்ட இடைவெளிக்கு பின், பாகிஸ்தான் வர்த்தகர்கள், இரு வாரங்களாக, குன்னூரில் நடக்கும் தேயிலை ஏல விற்பனையில், பங்கேற்று வருகின்றனர். இதனால், தேயிலை விற்பனை, 62 சதவீதத்திலிருந்து, 87 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## பருவநிலை மாற்றத்திற்கேற்ற பேணுகை வேளாண்மை உத்திகள்

பேணுகை வேளாண்மையில் மூன்று முக்கிய கோட்பாடுகளை கடைபிடிக்க வேண்டியது அவசியமாகும்.

1. குறைந்த உழவு / பேணுகை உழவு

2. பயிர்த்தாள்கள் மற்றும் கழிவுகளை கொண்டு நிரந்தரமாக மண் மேற்பரப்பில் மூடாக்கு அமைத்தல்

3. பயறு வகைப்பயிர்களை பயிர் சுழற்சி முறையில் சாகுபடி செய்தல்

**1. குறைந்த உழவு / பேணுகை உழவு:** பேணுகை உழவின் மூலம் மேல் மண் மற்றும் அடிமண் இறுக்கம் தடுக்கப் படுவதோடு மட்டுமின்றி மண்ணின் கட்டமைப்பும் மேம்படுகிறது.

* மண்ணின் அங்கக பொருட்களில் எரியூட்டும் தன்மை பெருமளவு குறைக்கப்படுகிறது.

* நீர் பிடிமானம் மற்றும் நீர் தேக்கி வைக்கும் தன்மை அதிகரித்து மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படுகிறது.

* மண்ணில் உறங்கும் நிலையில் உள்ள களை விதைகளின் முளைப்புத் திறனை குறைக்கச் செய்து களைகளின் தாக்கத்தை வெகுவாக குறைக்கிறது.

* பேணுகை வேளாண்மையில் பூஜ்ய உழவு / குறைந்த உழவினையே நடைமுறைப் படுத்துவதால், களை நிர்வாகத்தில் குறிப்பாக கோரை மற்றும் புல் வகைகளைக் கட்டுப்படுத்த பெரும்பாலும் ரசாயன களைக்கொல்லிகளை நம்பி இருக்க வேண்டியுள்ளது. எனவே தரமான களைக்கொல்லிகளை சரியான அளவில் சரியான தருணத்தில் போதிய ஈரப்பதம் இருக்கும் பொழுது பயன்படுத்தினால் மண்ணின் வளத்தை பாதுகாப்பதோடு மட்டுமின்றி களைகளை சிறப்பாக கட்டுப்படுத்தலாம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**1.1 ஆழ்சால் அகலபாத்தி:** இயந்திரங்களை கொண்டு ஆழ்சால் அகல பாத்தியை ஒரு மீட்டர் அளவு என்ற வீதத்தில் அமைத்து படுக்கையில் பயிர்களை நடவு/விதைக்கும் முறையானது தற்போது வளர்ந்துவரும் ஒரு தொழில்நுட்பமாகும்.

* குறைந்த வேலையாட்களைக் கொண்டு மேட்டுப்பாத்தி மற்றும் வாய்க்கால்களை அமைக்கலாம்.

* படுக்கை நடவு/விதைப்பு முறைக்கு மிகக் குறைந்த விதையளவு மற்றும் நாற்றுகளே தேவைப்படுகின்றன.

* படுக்கை நடவில் களைக் கொல்லிகளின் திறன் அதிகரிப்பதோடு மட்டுமின்றி களைகளை இயந்திரங்களை கொண்டு மிகச் சுலபமாக கட்டுப்படுத்திட வழிவகுக்கிறது.

* கடுமையான வறட்சி காலத்தில் பயிர்களைக் காப்பதோடு மட்டுமில்லாமல் மழை காலங்களில் அதிகப்படியான நீரினைவெளியேற்ற வழிவகை செய்கிறது.

* அடியுரம் மற்றும் மேல் உரத்தை சரியான அளவில் சரியான இடத்தில் பயிர்களுக்கு இட ஏதுவாக அமைகிறது.

* அதிகப்படியான சூரிய ஒளியை பயிர்களுக்கு கிடைக்கச் செய்து திரட்சியான பயிர் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது.

* பயிர்களின் வேர் பிடிமானம் அதிகரித்து மழைக்காலங்களில் பயிர்கள் சாய்ந்து விழும் தன்மையைக் கட்டுப்படுத்துகிறது.

**2. மண் மூடாக்கு:** தற்போது நிலவிவரும் குறைந்த பயிர் உற்பத்திக்கு மண்ணின் அங்கக பொருட்களின் அளவு, மண்ணின் வளம் மற்றும் மண்ணில் உள்ள சத்துக்கள் மிகப்பெரும் காரணிகளாக விளங்குகின்றன. இவற்றை மேம்படுத்த அதிகப்படியான இயற்கை உரங்கள் மற்றும் தொழு உரங்களை பயன்படுத்துவது அவசியமாகும். ஆனால் குறைந்து வரும் கால்நடைகளின் எண்ணிக்கை, இயற்கை உரங்களின் பற்றாக்குறை மற்றும் முறையற்ற பயிர்க்கழிவு நிர்வாகம் ஆகியவை இதற்கு பெரும் சவாலாக விளங்குகின்றன. இச்சூழலில் அதிக சத்துக்களை கொண்ட பயிர்கழிவுகளை நாம் பயன்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். பொதுவாக விவசாயிகள் பயிர் கழிவுகள் மற்றும் பயிர்த்தாள்களை தீவனமாகவும், கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு படுக்கைகளாகவும், காளான் உற்பத்திக்கும் சிலர் சாண எரிவாயு உற்பத்திக்கும் பயன்படுத்துகின்றனர். சிலர் வயல் வரப்புகளில் அப்படியே குவித்தும், மண்ணில் மடக்கி உழுதும், வயல்களிலேயே எரித்தும் மக்கிய குப்பையாக மாற்றி என பல்வேறு முறைகளில் நிர்வாகிக்கின்றனர்.

**3. பயறு வகைப்பயிர்களை பயிர் சுழற்சி முறையில் சாகுபடி செய்தல்:** சம்பா நெல்லுக்கு பிறகு விவசாயிகள் கட்டாயம் ஏதாவதொரு குறைந்த வயதுடைய பயறு வகை பயிர்களான உளுந்து, பச்சைப்பயறு, துவரை, தட்டைப்பயறு, கடலை, பசுந்தாள் உரப்பயிர்கள் மற்றும் சோயா ஆகிய வற்றை சாகுபடி செய்யும் பொழுது மண்ணின் வளம், அங்ககப் பொருட்களின் அளவு மற்றும் சத்துக்கள் மேம் படுத்துவது மட்டுமின்றி களைகளின் தாக்கத்தையும் வெகுவாக குறைக் கின்றது. மேலும் கோடைக்கு பிறகு சாகுபடி செய்யப்படும் பயிர்களில் பூச்சி மற்றும் நோய்களின் தாக்கத்தை குறைத்து பயிர்களின் விளைச்சலை பெருக்க வழிவகை செய்கின்றது.

**பி.கதிரேசன்,**
**செட்டிநாடு-630 102.**

## கோடைகாலத்தில் கறவை மாடுகளுக்கான தீவன மேலாண்மை - நவீன தொழில்நுட்பம்

கோடைகாலத்தில் கறவை மாடுகளை காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை வெயிலில் மேய்ச்சலுக்கு அனுப்பக்கூடாது.

பசுந்தீவனம், கலப்புத்தீவனம் கொடுக்கும் அளவை அதிகரித்து உலர், நார் தீவனம் அளிக்கும்

அளவை குறைக்க வேண்டும். பசுந்தீவனங்களை பகல் வேளையிலும் உலர் தீவனங்களை இரவு நேரங்களிலும் வழங்க வேண்டும். நார் தீவனங்களை சிறு துண்டுகளாக நறுக்கிக் கொடுப்பதன் மூலம் உடல் வெப்பம் தணியும்.

உலர் தீவனங்களான வைக்கோல், தட்டை ஆகியவற்றின் மீது உப்பு கலந்த தண்ணீர் அல்லது நாட்டு சர்க்கரை கலந்த தண்ணீர் தெளித்து பதப்படுத்தியபின் வழங்க வேண்டும். கோடை காலத்தில் போதிய அளவு பசுந்தீவனங்கள் கிடைக்கவில்லையெனில் மர இலைகள், பீர் நொதி, மரவள்ளிக்கிழங்கு திப்பி போன்ற ஈரப்பதம் அதிகமுள்ள தீவனங்களை பயன்படுத்தலாம். 1000 கிலோ (1 டன்) பீர் நொதிமீது ஒரு கிலோ சமையல் உப்பு, ஒரு கிலோ சோடா உப்பைக் கலந்து கொடுக்க வேண்டும்.

வெயில்காலத்தில் வியர்வை மூலம் வெளியேறும் தாது உப்புக்களின் இழப்பை சரிக்கட்ட தாது உப்புக்கலவையை 50 சதவீதம் அதிகரித்து கொடுக்க வேண்டும். நாள் ஒன்றுக்கு 15லிட்டர் அல்லது அதற்கு மேல் பால் கறக்கும் மாடுகளுக்கு தினமும் 20-30 கிராம் தாது உப்புக்கலவை, 50 முதல் 100 கிராம் சமையல் உப்பு, 30-50 கிராம் சமையல் சோடா சேர்த்து கொடுக்க வேண்டும். கோடைகாலத்தில் தீவனம் உட்கொள்ளும் அளவு குறையும். எனவே நாள் ஒன்றுக்கு 15 லிட்டருக்கு மேல் கறவை மாடுகளுக்கு பருத்திக்கொட்டை, வறுக்கப்பட்ட சோயா, இதர எண்ணெய்வித்துக்களை 500 கிராம் முதல் ஒரு கிலோ வரை கூடுதலாக கொடுக்க வேண்டும். மாட்டுக்கொட்டகையில் நீர் தெளிப்பான், மின் விசிறி அமைத்து உடல் வெப்பத்தைக் குறைப்பதன்மூலம் தீவனம் உண்ணும் அளவை அதிகரிக்க முடியும். கறவை மாடுகளுக்கு எப்போதும் குளிர்ந்த குடிநீர் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். கோடையில் வெப்ப அயற்சியைத் தணிக்க கலப்பு தீவனத்தில் மாடு ஒன்றுக்கு 5 முதல் 10 கிராம் வரை பேக்கரி ஈஸ்ட் கலந்து கொடுக்கலாம். மேலும் புண்ணாக்கு, தவிடு ஆகியவற்றை 12 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து கொடுக்கலாம்.

தற்காலத்தில் கோடை அயற்சியைத் தணிக்கவல்ல மூலிகை மருந்துகள் அல்லது நெல்லிக்காய், துளசி, அஸ்வகந்தா போன்ற மூலிகைகளை மாடுகளுக்கு கொடுக்கலாம். தவிர தினமும் 100 முதல் 200 கிராம் வரை அசோலாவைத் தீவனத்தில் கலந்து கொடுக்கலாம். மேலும் செலினியம், குரோமியம் ஆகியவற்றை தீவனத்தில் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி அதிகரித்துக் கொடுக்கலாம்.

(தகவல்: பெ.வசந்தகுமார், கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்-

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**22.05.2013 A.M**

## 17 ஆண்டுகளுக்கு பிறகு மேட்டூர் அணையின் நீர்மட்டம் 20 அடியாக சரிந்த பரிதாபம்



மேட்டூர் : மேட்டூர் அணையிலிருந்து டெல்டா மாவட்ட பாசன கால்வாய் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் தேவைக்காக, கடந்த சில நாட்களாக விநாடிக்கு 600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. தற்போது குடிநீர் தேவை அதிகரித்துள்ளதால், நேற்று முன்தினம் மாலை முதல் விநாடிக்கு 800 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

அதே நேரத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால், அணைக்கு வரும் நீரின் அளவு மிகவும் குறைந்துவிட்டது. நேற்று காலை விநாடிக்கு 72 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. வரத்தை விட திறப்பு அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது.


நேற்று முன்தினம் காலை 20.53 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று காலை 20.37 அடியாக குறைந்தது. அணையின் நீர் இருப்பு 4.21 டிஎம்சி. கடந்த 1996ம் ஆண்டு மார்ச் 27ம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 20.10 அடியாகவும், நீர் இருப்பு 4.13 டிஎம்சியாகவும் இருந்தது. இந்நிலையில், கடந்த 17 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 20 அடியாக குறைந்துள்ளது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில் போதிய மழை இல்லாததாலும், காவிரியின்

துணை நதிகளான பாலாறு, சின்னாறு, தொப்பையாறு போன்றவை வறண்டு போனதாலும், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்து தற்போது 72 அடியாக வந்து கொண்டிருக்கிறது.

வழக்கமாக ஜூன் 12ம் தேதி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பது வழக்கம். இந்த ஆண்டு ஜூன் 12ம் தேதிக்கு இன்னும் 20 நாட்களே உள்ள நிலையில், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இல்லாதது, டெல்டா மாவட்ட பாசன விவசாயிகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. அதே சமயத்தில் பருவ மழை தொடங்கினாலும், கர்நாடகாவில் உள்ள அணை நிரம்பிய பிறகே தமிழகத்திற்கு உபரி நீர் வந்து சேரும் நிலை உள்ளது. இதனால் பருவமழை கைகொடுத்தால் மட்டுமே டெல்டா விவசாயம் என்பது சாத்தியமாகும் நிலை உள்ளது.

கடந்த ஆண்டை காட்டிலும் நடப்பு ஆண்டில் விவசாயம் கடுமையாக பாதிக்கும் சூழல் உருவாகியுள்ளது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இதே நிலையில் இருந்தால் நடப்பு ஆண்டில் குறுவை, சம்பா சாகுபடி கடும் பாதிப்பை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளது எனவும் நெல் உற்பத்தி குறையும் எனவும் வேளாண் அறிஞர்கள் கூறுகின்றனர்.

## காவிரி நீர் கிடைக்க வாய்ப்பு இல்லை இந்தாண்டு குறுவை சாகுபடியை விவசாயிகள் கைவிட வேண்டும்



தஞ்சை : தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவை சார்பில் ‘மேட்டூர் அணை பாசனப் பகுதியில் பயிர் சாகுபடியும், நீர் வழங்கல் திட்டமும்’ என்ற தலைப்பில், 2013,14ம் ஆண்டுக்கு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள கையேடு வெளியீட்டு விழ,£ தஞ்சை அடுத்த காட்டுத்தோட்டம் மண் மற்றும் நீர் ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று நடந்தது.
இதில் கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி பேசியதாவது:

33 கோடி மக்கள் தொகையுடன் நாடு சுதந்திரம் பெற்றபோது இருந்த அதே அளவு நீரை பயன்படுத்தியே, தற்போது 128 கோடி மக்கள் தொகைக்கும் நாம் வேளாண் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். வேளாண் நிலங்களின் பரப்பளவும் பெருமளவில் குறைந்து விட்டது. மக்களுக்கு தேவையான அளவு உணவு உற்பத்தியை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளோம். நெல், கரும்பு போன்ற பயிர்களை இயந்திரங்களை பயன்படுத்தி அறுவடை செய்ய முடியும். ஆனால், பயிறு வகைகள்,

காய்கறிகளை ஒரே நேரத்தில் அறுவடை செய்ய முடியாது. இதற்காக 55 நாளில் ஒரே நேரத்தில் அறுவடை செய்யும் வகையில் பச்சை பயிறு வகை தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதேபோல், காய்கறிகளை யும் ஒரே நேரத்தில் அறுவடை செய்யும் வழிமுறை களையும் வேளாண் பல்கலைக்கழக வல்லுநர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.
கடந்த ஆண்டில் மேட்டூர் தண்ணீர் கிடைக்காததாலும், பருவமழை பொய்த்ததாலும் குறுவை பாதிக்கப்பட்டது.

தொடர்ந்து சம்பா சாகுபடியும் நிலத்தடி நீரை நம்பியே டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டும் மேட்டூர் அணையில் இருந்து குறுவைக்கான தண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. பருவ மழையில் சராசரி அளவும் குறைந்து கொண்டே வருகிறது. இந்த ஆண்டில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள் நிலத்தடி நீரை மேலும் உறிஞ்சி விவசாயம் செய்தால் கடல் நீர் உட்புகும் நிலை ஏற்பட்டு பல ஆண்டுகள் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்படும்.

எனவே, இந்த ஆண்டு டெல்டா விவசாயிகள் குறுவை சாகுபடியை தவிர்த்து, குறுவை சாகுபடிக்கு விடுமுறை விட வேண்டும். இனிவரும் காலங்களிலும் டெல்டா விவசாயிகள் ஒருபோக சம்பா சாகுபடியை மட்டுமே மேற்கொள்ள வேண்டும். குறுவை சாகுபடிக்குப் பதில் பயிறுவகை பயிர்களை மாற்றுப் பயிர்களாக பயிரிட வேண்டும்.
இவ்வாறு அவர் பேசினார்.

## வறட்சி நிதியில் பாரபட்சம் மத்திய அரசை கண்டித்து ஜூனில் ஆர்ப்பாட்டம் பாரதிய கிசான் சங்கம் முடிவு

திருச்சி, : வறட்சி நிதியில் பாரபட்சம் காட்டுவதாக கூறி மத்திய அரசை கண்டித்து திருச்சியில் ஜூன் 26ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த பாரதிய கிசான் சங்கம் முடிவு செய்துள்ளது. இதுதொடர்பாக பாரதிய கிசான் சங்க மாநில துணைத்தலைவர் அய்யாக்கண்ணு நேற்று வெளியிட்ட அறிக்கை: ஆந்திரா, கேரளா, மகாராஷ்டிரா மாநிலங்களில் ஐந்து மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சிக்கு மத்திய அரசு ரூ.2,900 கோடியை பேரிடர் நிதியாக அளித்துள்ளது. தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் 31 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. காவிரி டெல்டா மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மரங்கள் கூட காய்ந்து விட்டன.  தமிழக வறட்சியை மத்தியக்குழு ஆய்வு செய்தது. ஆனால், இதுவரை எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. தமிழகத்தை மாற்றான்தாய் மனப்பான்மையில் மத்திய அரசு பார்க்கிறது. விவசாயிகள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்வதுடன், பேரிடர் நிதியாக 31 மாவட்டங்களுக்கும் தலா ரூ.1,000 கோடி ஒதுக்க வேண்டும். இதுதொடர்பாக நடவடிக்கை எடுத்து அறிவிக்காவிட்டால் ஜூன் 26ம் தேதி திருச்சி தெப்பக்குளம் தபால் நிலையம் முன்பு விவசாய உடையில் ஆர்ப்பாட்டம் நடத்துவோம். சட்டை அணியாமல் கோவணத்துடன் அரை நிர்வாண போராட்டம் நடைபெறும்.  இப்போராட்டத்துக்கு பின்னரும் மத்திய அரசு தமிழகத்துக்கு உரிய நிவாரணம் தராவிட்டால் விவசாயிகளை திரட்டி புதுடில்லியில் மறியல் போராட்டத்தை செப்டம்பரில் நடத்துவோம். இதுதொடர்பாக வரும் 26ம் தேதியன்று திருச்சியில் நடைபெறும் மாநில செயற்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும். இவ்வாறு அவர்  தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**22.05.2013 A.M**

---

**கடலாக காட்சியளித்தது குட்டையாக மாறிய சோகம் 17 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் 20 அடியாக குறைந்த மேட்டூர் அணை டெல்டா பாசனத்துக்கு இந்த ஆண்டு தண்ணீர் திறக்கப்படுமா?**

மேட்டூர்

மேட்டூர் அணை 17 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் 20 அடியாக குறைந்து குட்டை போல காட்சி அளிக்கிறது. இதனால் இந்த ஆண்டு டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

மேட்டூர் அணை

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர் உள்பட 11 டெல்டா மாவட்ட விவசாயிகளின் பாசனதேவை மற்றும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக 1934–ம் ஆண்டு மேட்டூர் அணை கட்டப்பட்டது. இந்த அணையில் 120 அடி வரை தண்ணீர் தேக்கி வைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. ஜூன்மாதம் முதல் செப்டம்பர் மாதம் முடிய பெய்யும் தென்மேற்கு பருவ மழை தண்ணீரையும், அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் முடிய பெய்யும் வடகிழக்கு பருவமழை தண்ணீரையும் மேட்டூர் அணையில் சேமித்து வைத்து பாசனம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12–ந் தேதி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பது வழக்கம். இவ்வாறு பாசனத்திற்காக திறக்கப்படும் தண்ணீர் ஜனவரி 28–ந் தேதியுடன் நிறுத்தப்படும்.

கால்வாய் பாசனம்

இதுமட்டுமின்றி ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் முதல் வாரத்தில் கால்வாய் பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும். இந்த பாசனத்தின் மூலம் சேலம்,

நாமக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். கடந்த ஆண்டு பருவமழை தவறியதால் டெல்டா பாசனத்திற்கு குறித்த நேரத்தில் தண்ணீர் திறக்கப்படாமல் காலதாமதமாக 90 நாட்களுக்கு பிறகு பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதேநேரத்தில் கால்வாய் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படாமல் குடிநீர் பயன்பாட்டிற்காக மட்டுமே தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் கடந்த ஆண்டு டெல்டாபாசனம் மற்றும் கால்வாய் பாசனம் ஆகியவற்றின் மூலம் பயன்பெறும் விவசாயிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டனர்.

<u>20 அடி ஆனது</u>

இருப்பினும் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு மேட்டூர் அணையில் இருந்து நேற்று வரை தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் நாள்தோறும் குறைந்து கொண்டே வந்து நேற்று 20 அடியாக காட்சி அளித்தது. முந்தைய காலங்களை ஒப்பிட்டு பார்க்கும் போது கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1996–ம் ஆண்டுதான் அணையின் நீர்மட்டம் 20 அடியாக குறைந்து காணப்பட்டது. தற்போது 17 ஆண்டுகளுக்கு பிறகு நீர்மட்டம் 20 அடியாக குறைந்து காணப்படுவதால் மேட்டூர் அணையை ஆதாரமாக கொண்டு நீர்மின்நிலையங்களில் நடைபெற்று வந்த மின்உற்பத்தி அடியோடு பாதிக்கப்பட்டு உள்ளது. அதே போன்று மீன் உற்பத்தியும் பாதிக்கப்பட்டு உள்ளது.

<u>திறக்கப்படுமா?</u>

இந்த ஆண்டு காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட வேண்டிய நாளான ஜூன் 12–ந் தேதிக்கு இன்னும் 20 நாட்களே உள்ள நிலையில், கடலாக காட்சியளித்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் மிகவும் குறைந்து குட்டையாக மாறிய நிலையில் பரிதாபமாக காட்சி அளிக்கிறது. எனவே இந்த ஆண்டு டெல்டா பாசனத்துக்கு உரிய நேரத்தில் மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்படுமா என்பது யாருக்கும் தெரியாத புதிராகவும், கேள்விக்குறியாகவும் உள்ளது.

**முல்லைப் பெரியாறு அணையின் யானை வாய்க்கால் தூர்வாரும் பணி தீவிரம் தமிழகத்துக்கு கூடுதல் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை**

கூடலூர்

தமிழகத்துக்கு கூடுதல் தண்ணீர் கிடைப்பதற்காக முல்லைப் பெரியாறு அணையின் யானை வாய்க்கால் தூர்வாரும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

முல்லைப் பெரியாறு அணை

கேரள மாநிலம் முல்லைப் பெரியாறு அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் கொண்டு வரும் யானை வாய்க்கால் தூர்ந்து போய் இருந்தது. மேலும் முல்லைப் பெரியாறு அணை பராமரிப்பு பணிகளை தமிழக அரசு மேற்கொள்ளும் போது மத்திய நீர்வள ஆணைய என்ஜினீயர் தலைமையில் உள்ள கண்காணிப்பு குழுவினர் மேற்பார்வையில் பணிகளை செய்ய வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டு இருந்தது.

இதைத் தொடர்ந்து முல்லைப் பெரியாறு அணையில் மதகு பகுதியில் தேங்கிய மணலை அகற்றும் பணியும், பேபி அணையில் கான்கிரீட் அமைக்கும் பணியும், கேலரிப் பகுதியில் கசிவுநீர் படிமான அடைப்பை நீக்கும் பணியும் நடந்து முடிந்துள்ளது.

யானை வாய்க்கால்

இந்த நிலையில் அணையில் இருந்து தமிழக பகுதிக்கு தண்ணீர் கொண்டு வரும் திறந்து வாய்க்கால் என்று அழைக்கப்படும் யானை வாய்க்காலில் படிந்துள்ள சேறுகளை அகற்றி தூர்வார முடிவு செய்யப்பட்டது. இந்த வாய்க்கால் தூர்வாரப்பட்டால் தமிழகத்துக்கு கூடுதல் தண்ணீர் கிடைக்கும். தேக்கடி படகு துறையில் இருந்து தமிழக எல்லை பகுதி வரை 2 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ள வாய்க்காலை தூர்வார ரூ.22 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான பணிகள் கடந்த ஏப்ரல் மாதம் 15–ந்தேதி தொடங்கப்பட்டது. சில நிர்வாக காரணங்களால் இந்த பணிகள் சில காலம் தடைபட்டது.

கூடுதல் தண்ணீர்

தற்போது இந்த பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. மத்திய நீர்வள ஆதார அமைப்பின் இயக்குனர் சுனில்ஜெயின், கேரள நீர்வள கண்காணிப்பு பொறியாளர் குரியகோஸ், செயற்பொறியாளர் ஜார்ஜ் டேனியல், தமிழக கண்காணிப்பு பொறியாளர் ராஜேஷ், செயற்பொறியாளர் மாதவன், உதவி செயற்பொறியாளர் கல்யாணசுந்தரம், உதவி பொறியாளர்கள் மயில்வாகனன், ரமேஷ்வரன் ஆகியோர் முன்னிலையில் இந்த பணிகள் நடந்து வருகிறது. இதற்காக பல பொக்லைன் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது. இந்த பணிகள் தொடர்ந்து 20 நாட்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பணிகள் முடிவடைந்தால் தமிழகத்துக்கு கூடுதல் தண்ணீர் கிடைக்கும்.

**பாரம்பரியமிக்க வேளாண் பொருட்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து பயன்படுத்த வேண்டும் கலெக்டர் விஜய் பிங்ளே பேச்சு**

திருவண்ணாமலை,

பாரம்பரியமிக்க வேளாண் பொருட்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றை பயன்படுத்த வேண்டும் என்று கலெக்டர் விஜய் பிங்ளே பேசினார்.

<u>வேளாண் கருத்தரங்கு</u>

திருவண்ணாமலையில் வேளாண்மை துறையின் சார்பில் பாரம்பரிய பொருட்கள் விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் சக்கரவர்த்தி தலைமை தாங்கினார். கருத்தரங்கை கலெக்டர் விஜய் பிங்ளே தொடங்கி வைத்து பேசியதாவது:

பாரம்பரியமிக்க வேளாண் பொருட்களான சிறுதானியங்கள், இளநீர், சீயக்காய் மற்றும் பருத்திஆகிய வற்றின் முக்கியத்துவத்தை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<u>இளைய தலைமுறையினர்</u>

இளைய தலை முறையினருக்கு பாரம்பரியமிக்க வேளாண் பொருட்களின் அவசியத்தை உணர்த்த மீண்டும் அப்பொருட்களை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதே இந்த கருத்தரங்கின் நோக்கமாகும். நிலத்துக்கு ஏற்ற வகையில் பயிர் செய்ய வேண்டும். தண்ணீரை கொண்டு சிக்கனமாக வேளாண் உற்பத்தியை பெருக்க வேண்டும். கரும்பு, நெல் ஆகியவற்றுக்கு தண்ணீர் அதிகமாக தேவைப்படுகிறது. தற்போது மழை இல்லா விட்டாலும் திருவண்ணாமலை மாவட்டத்தில்தான் பயிர்கள் வைக்கப்படுகிறது.

<u>கண்காட்சி</u>

வேளாண் பொருட்களின் விழிப்புணர்வு ஏற்படுத்த வேளாண்மை துறையின் சார்பில் ஆங்காங்கே கண்காட்சி அமைக்கப்பட வேண்டும். விற்பனையும் செய்ய வேண்டும். வருகிற திங்கட்கிழமை முதல் கலெக்டர் அலுவலக வளாகத்தில் வேளாண் விற்பனை கடையும், வேளாண் பொருட்கள் காட்சியும் வைக்கப்படும். எனவே, வேளாண்மை பெருமக்களாகிய நீங்கள் பாரம்பரியமிக்க வேளாண் பொருட்களின் முக்கியத் துவத்தை உணர்ந்து அவற்றை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

<u>சுழல் நிதி</u>

முன்னதாக கலெக்டர் விஜய் பிங்ளே ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மை திட்டம் குறித்த கையேட்டினை வெளியிட்டார். நீர்வடிப்பகுதி திட்டத்தின் கீழ் 28 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சுழல்நிதியாக ரூ.13 லட்சத்து 44 ஆயிரத்துக்கான காசோலையை வழங்கினார்.

கருத்தரங்கில் சிறு தானியத்தில் உயர் தொழில்நுட்பம் மற்றும் முக்கியத்துவம் குறித்து வேலூர், காஞ்சீபுரம் வேளாண்மைஅறிவியல் மையத்தின் விரிவுரையாளர் செந்தில்வேல், தென்னை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து கிண்டி வேளாண்மை அறிவியல் மைய விரிவுரையாளர் நடராஜன், பருத்தி சாகுபடி தொழில் கீழ்நெல்லி அறிவியல் மையத்தின் விரிவுரையாளர் முருகேசன் ஆகியோர் விளக்கவுரை ஆற்றினார்கள்.

கருத்தரங்கில் மாநில வேளாண் உற்பத்திக்குழு உறுப்பினர்கள் வேட்டவலம் மணிகண்டன், மாவட்ட விவசாய சங்கத்தலைவர் வெங்கட்டகிருஷ்ணன், ஆணைவாடி வெங்கடேசன் ஆகியோர் பேசினார்கள். கலெக்டரின் நேர்முக உதவியாளர் சந்திரசேகரன், வேளாண்மை உதவி இயக்குனர் (நீர்வடி முகமை) அரக்குமார், வேளாண் அலுவலர்கள் ராம்பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக வேளாண்மை அலுவலர் எலிசபெத்மேரி வரவேற்றார். முடிவில் வேளாண்மை துணை இயக்குனர் சந்திரசேகர் நன்றி கூறினார்.

## பச்சை தேயிலைக்கு குறைந்த பட்ச விலை வழங்க வேண்டும் விவசாயிகள் சங்க தலைவர் பேட்டி

ஊட்டி,

நீலகிரி சிறு தேயிலை விவசாயிகள் நலன் கருதி பச்சை தேயிலைக்கு குறைந்தபட்ச விலை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீலகிரி சிறு விவசாயிகள் சங்க தலைவர் ஏ.பெள்ளி தெரிவித்தார்.

உத்தரவு

நீலகிரி சிறு விவசாயிகள் சங்க தலைவர் ஏ.பெள்ளி 'தினத்தந்தி' நிருபருக்கு சிறப்பு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:– நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான பச்சை தேயிலைக்கு குறைந்த பட்ச விலையை வழங்க நடவடிக்கை எடுக்கும் படி சென்னை ஐகோர்ட்டு மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தர விட்டு உள்ளது. இந்த உத்தரவின் படி இந்திய தேயிலை வாரிய தலைவர் பானு, பச்சை

தேயிலைக்கு குறைந்த பட்ச விலை வழங்க குழு அமைத்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்து உள்ளனர். இந்த உத்தரவை மத்திய, மாநில அரசுகள் அமலாக்க வேண்டும்.

<u>நிவாரணம்</u>

நீலகிரி மாவட்டத்தில் பச்சை தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்ட போது கொய் மலர் சாகுபடி மேற்கொள்ள விவசாயிகள் ஊக்கு விக்க பட்டனர். ஆனால் கொய் மலர்களுக்கு சரியான விலை, தரமான கொய் மலர் நாற்றுகள் கிடைக்க வில்லை. இதனால் இந்த கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்ட விவசாயிகள் நலிவடைந்து விட்டனர் அவர்களுக்கு அரசு நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் நீர் பிடிப்பு பகுதிகளை அரசு பாதுகாத்து வேண்டும். இதன் மூலம் இந்த பகுதியில் இருந்து குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க சம்பந்தப் பட்ட அரசு துறைகள் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் வனப்பகுதியில் யூகாலீஸ் மரங்கள் வெட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் யூகாலீஸ் வேர் பகுதி அகற்றாமல் உள்ளது.இந்த வேர் பகுதியை அகற்றி அந்த பகுதியில் சோலை மரக்கன்று நட வேண்டும்.நீலகிரி மாவட்டத்தில் குளம் குட்டைகள் தூர் எடுத்து மழைநீர் சேகரித்து நீர் வளம் காக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## திருப்பூர் மாவட்டத்துக்கு வறட்சி நிவாரணமாக ரூ.76 கோடி ஒதுக்கீடு மாவட்ட கலெக்டர் தகவல்

திருப்பூர்,

திருப்பூர் மாவட்டத்துக்கு வறட்சி நிவாரணமாக ரூ.76 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் தெரி வித்துள்ளார்.

<u>விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்</u>

திருப்பூர் மாவட்ட கலெக் டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அதிகாரி கஜலட்சுமி, வேளாண்மைத் துறை இணை இயக்குனர் முகமது கலிபுல்லா ஷெரிப், கூட்டுறவு துறை மண்டல இணைப்பதிவாளர் பாபு ஆகி யோர் முன்னிலை வகித்தனர். துணை இயக்குனர் சந்தான கிருஷ்ணன் வரவேற்றார்.

கூட்டம் தொடங்கியதும் அனைத்து விவசாயிகளும் வறட்சியை பற்றி பேசினார் கள். அப்போது அவர்கள் கூறியதாவது:

வறட்சி நிவாரணம்

திருப்பூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை முழு அளவில் நிவாரணத் தொகை வந்து சேரவில்லை. நிவாரண நிதி எவ்வாறு வழங்கப்படுகிறது? என்று வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். நிவாரண நிதி வழங்குவது சம்பந்தமாக, கிராம நிர்வாக அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டால், ஜமாபந்தியை காரணம் கூறி பதில் அளிக்க மறுக்கிறார்கள். 2 ஏக்கர் வைத்துள்ள ஒரு விவசாயிக்கு, 30 சென்ட் அளவுக்கு தான் நிவாரணம் கிடைத்துள்ளது.

பாரபட்சம்

50 சதவீதம் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும், முழுமையாக நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நிவாரணத் தொகை ஒதுக்கப்பட்டதில், உடுமலை தாலுகாவுக்கு அதிக மாகவும், தாராபுரம் தாலுகா வுக்கு குறைவாகவும் ஒதுக்கப் பட்டுள்ளது. நிவாரணம் உண்மையி லேயே பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு தான் ஒதுக்கப்பட் டுள்ளதா? என்பதை அனைத்து விவசாயிகளும் அறிந்துகொள்ளும் வகையில், அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களிலும் பயனா ளிகளின் பட்டியலை வைக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் பேசினார்கள்.

இதற்கு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் பதில் அளித்து பேசிய போது கூறிய தாவது:

ரூ.76 கோடி

விவசாயிகள் மீது எப் போதுமே திருப்பூர் மாவட்ட நிர்வாகம் பரிவோடு தான் நடந்து கொண்டு இருக்கிறது. அண்டை மாவட்டங்களான கோவை மாவட்டத்துக்கு ரூ.5 கோடியும், ஈரோடு மாவட்டத் துக்கு ரூ.25 கோடியும் வறட்சி நிவாரணம் ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளது.

ஆனால் நானும், மாவட்ட வருவாய் அதிகாரியும் போராடி திருப்பூர் மாவட் டத்துக்கு ரூ.76 கோடி நிவாரணத்தொகையை பெற்று கொடுத்துள்ளோம். ஆர்.டி.ஓ.க்கள், தாசில்தார்கள் வறட்சி நிவாரண பணியில் ஈடுபட்டிருப்பதால் தான் இன்று (நேற்று) கூட்டத்துக்கு அவர்கள் வரவில்லை. ரூ.76 கோடி உரியவர்களிடம் சேர்க் கும் பணியில் மாவட்ட நிர் வாகம் முழுவீச்சில் செயல் பட்டு வருகிறது.

இவ்வாறு கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் பேசினார்.

காலதாமதம்

மாவட்ட வருவாய் அதிகாரி கஜலட்சுமி பேசும் போது கூறியதாவது:

உண்மையிலேயே பாதிக் கப்பட்ட விவசாயிகளிடம் நிவாரணத் தொகை சேர வேண்டும் என்பதால் தான் காலதாமதம் ஏற்பட்டு வரு கிறது. ஆர்.டி.ஓ.க்கள் தலை மையில் குழு அமைத்து இதற் கான நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளோம். பாதிக்கப் பட்ட பயனாளிகள் பட்டிய லில் விடுபட்டிருந்தால், உடனே விண்ணப்பிக்கலாம். அவர்களுக்கும் நிவாரணம் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

தாசில்தார் அலுவலகங் களில் பயனாளிகள் பட்டியல் இருக்கும். அங்கு நீங்கள் சென்று உங்கள் பெயர்கள் பட்டியலில் விடுபட்டு இருக் கிறதா? என்று சரிபார்த்துக் கொள்ளலாம். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அனைத்து கிராம நிர்வாக அலுவலகங்களிலும் வறட்சி நிவாரணம் பெறும் விவ சாயிகள் பட்டியல் வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு வருவாய் அதி காரி கஜலட்சுமி கூறினார்.

**நிலத்தடிநீரை பயன்படுத்தி இந்த ஆண்டு குறுவை சாகுபடி செய்ய வேண்டாம் வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் வேண்டுகோள்**

தஞ்சாவூர்

நிலத்தடி நீரை பயன்படுத்தி இந்த ஆண்டு குறுவை சாகுபடி செய்ய வேண்டாம் என்று வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேளாண்மை வல்லுனர் பேரவை

தமிழ்நாடு மூத்த வேளாண்மை வல்லுனர்கள் பேரவை சார்பில் மேட்டூர் நீர்ப்பாசன பகுதி நீர் வழங்கும் திட்டம் புத்தக வெளியீட்டு விழா தஞ்சையை அடுத்த காட்டுத்தோட்டத்தில் உள்ள மண் மற்றும் நீர் ஆராய்ச்சி நிலையத்தில் நேற்று நடைபெற்றது.விழாவிற்கு பழனியப்பன் தலைமை தாங்கினார். செயலாளர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார். நூலினை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி வெளியிட்டு பேசினார். விழாவில் துணைத்தலைவர் நடராஜன், பொருளாளர் ஜெயபாலன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.விழாவில் மூத்த வேளாண்மை வல்லுனர்கள் பேரவை தலைவர் கலைவாணன் பேசுகையில், ''மேட்டூர் அணையில் இருந்து காவிரி பகுதிக்கு கடந்த ஆண்டு 230 டி.எம்.சி. தண்ணீர் வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 65 டி.எம்.சி. தண்ணீர் தான் வந்தது. அதே போல் வடகிழக்குப்பருவமழை மூலம் 280 மில்லிமீட்டர் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 69 மில்லி மீட்டர் தான் மழை பெய்தது. இது 150 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு குறைவாக பெய்துள்ளது. தென்மேற்கு

பருவமழை பெய்து ஜூன் 25–ல் மேட்டூர் அணை திறந்தால் தான் குறுவை சாகுபடிசெய்ய முடியும். அதற்கு வாய்ப்பு குறைவாக உள்ளது. தென்மேற்கு பருவமழை பெய்து தண்ணீர் வர ஜூலை அல்லது ஆகஸ்டு மாதம் ஆகி விடும் எனவே குறுவையை விட சம்பாவுக்குத்தான் உகந்ததாக இருக்கும்''என்றார்.முடிவில் ராமதாஸ் நன்றி கூறினார்.

துணைவேந்தர் பேட்டி

முன்னதாக வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி நிருபர்களிடம் கூறியதாவது:– காவிரி படுகையில் குறுவை சாகுபடிக்கு வாய்ப்பு குறைவாக உள்ளது. காரணம் மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லை. எனவே சிறுதானியம் மற்றும் பயறு வகைகளை சாகுபடி செய்யலாம். காவிரி படுகையில் இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு மழை இருக்காது என வானிலை ஆய்வாளர்கள் கூறி உள்ளனர். மற்ற இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.இந்த ஆண்டு காவிரி டெல்டா பகுதியில் ஒரு போகம் நெல் சாகுபடி செய்ய வேண்டும். 2 அல்லது 3 முறை மழை பெய்தாலே சிறுதானியம் மற்றும் பயறு வகைபயிர்களை அறுவடை செய்து விடலாம். தற்போது கோடை நெல்சாகுபடி நிலத்தடி நீரை பயன்படுத்தி தான் நடைபெறுகிறது. இந்த நிலையில் குறுவை சாகுபடியும் நிலத்தடி நீரை பயன்படுத்தினால் நிலத்தடி நீர் குறைந்து கடல்நீர் விளைநிலங்களில் புகுந்துவிடும் வாய்ப்பு உள்ளது. எனவே குறுவை சாகுபடி இந்த ஆண்டு சாத்தியம் இல்லை. எனவே குறுவை சாகுபடிக்கு இந்த ஆண்டு விடுமுறை விடலாம்.

மரங்கள் நட வேண்டும்

குறுவை சாகுபடி மூலம் உற்பத்தி செய்யப்படும் நெல் நாம் பயன்படுத்துவதை விட வெளி மாநிலங்களுக்குத்தான் அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறோம். அரிசி விலை உயராமல் இருக்க தமிழக அரசு 1 கிலோ ரூ.20–க்கும், இலவச அரிசியும் வழங்கி வருகிறது. கர்நாடக அரசு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு குளம், ஏரிகளில் நீரை நிரப்பி விட்டனர். எனவே நாமும் அதனை செய்யலாம். தமிழக அரசு காவிரி பாசன பகுதி மேம்பாட்டிற்கு ரூ.1,920 கோடிக்கும், நிலத்தடி நீரை மேம்படுத்தவும், தூர்வாருதல் போன்ற பணிகளுக்கு ரூ.1,200 கோடிக்கும் திட்டம் தயாரித்துள்ளது.மேற்கு கடற்கரை ஓரங்களில் அதிக அளவில் மரங்கள் நடப்பட்டு உள்ளன. அதேப்போல் கிழக்கு கடற்கரை பகுதிகளிலும் உயர்ந்த பனைமரம், கருவேலமரம் போன்றவற்றை நட வேண்டும். வருங்காலங்களில் புயல், மழை சேதத்தில் இருந்து காக்க மரம் நட வேண்டும். இவ்வாறு செய்வதால் கடல் நீர் விளை நிலங்களில் புகுவது தடுக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

**விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் 'பருத்திக்கு உரிய விலை கிடைப்பதில்லை' விவசாயிகள் குற்றச்சாட்டு**

விழுப்புரம்,

விழுப்புரம் மார்க்கெட் கமிட்டியில் பருத்திக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்று விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

<u>பருத்திக்கு விலை கிடைப்பதில்லை</u>

விழுப்புரம் மார்க்கெட் கமிட்டிக்கு சுற்றியுள்ள கிரா மப் பகுதிகளில் இருந்து பருத்தி வரத்து அதிகமாக உள்ளது. ஆனால் பருத்திக்கான உரிய விலையை வழங்கவில்லை என விவசாயிகள் கூறுகின்றனர். அதாவது ஒரு குவிண்டால் பருத்தி (100 கிலோ) ரூபாய் 7 ஆயிரம் வரை மார்க்கெட் கமிட்டியில் விலை போனது. தற்போது ரூ.4,500 முதல் 4,900 மட்டுமே விலை போகிறது. இதனால் தற்போதே வளவ னூரைச் சுற்றியுள்ள பகுதி களில் விவசாயி கள் பருத்தி நடவு செய்வதை நிறுத்தி விட் டனர். இதே நிலை நீடித்தால் விவசாயிகள் பருத்தி பயிரிடுவதை நிறுத்தி விட்டு கரும்பு போன்றவைகளை பயிரிடும் சூழ்நிலை ஏற்படும். ஆதலால் விவசாயிகளுக்கு நியாயமான விலையை வழங் கிட வேண்டும். இல்லை யென் றால் அரசு நேரடி கொள்முதல் நிலையத்தை திறந்திட வேண்டும்.

<u>குறைந்து விடும்</u>

நிச்சயம் பருத்திக்கு உரிய விலையை வழங்காவிட்டால் வரும் ஆண்டில் பருத்தி வரத்து முழுமையாக குறைந்து விடும் என்று விவசாயிகள் கூறினர்.

**விழுப்புரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரண பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

விழுப்புரம்,

விழுப்புரம் மாவட்டத் தில் வறட்சி நிவாரண பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண் டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

<u>அமைப்புக்குழு கூட்டம்</u>

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் விழுப்புரம் மாவட்ட அமைப்புக்குழு கூட்டம் விழுப்புரத்தில் கோவிந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அமைப்புக்குழு ஒருங்கிணைப் பாளர் கலியமூர்த்தி கலந்து கொண்டு மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியினால் ஏற்பட்டுள்ள பெருமளவிலான பயிர் சேதங்கள் குறித்து விரிவான அறிக்கை சமர்பித் தார். அதனை தொடர்ந்து கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:

வறட்சி நிவாரண பணிகள்

குளறுபடி இல்லாத வகை யில் உரிய முறையில் பாதிப் புகளை மதிப்பீடு செய்து பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரண பலன்கள் கிடைக்கும் வகையில் வறட்சி நிவாரண பணிகளை விழுப்புரம் மாவட்டத்தில் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

கடும் வறட்சியின் காரண மாக மாவட்டம் முழுவதும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது. எனவே தட்டுப் பாடின்றி குடிநீர் கிடைக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், வறட்சி பாதிப்புக்கு மத்தியிலும் மிஞ்சியிருக்கும் பயிர்களை பாதுகாக்க நிலத்தடி நீரை பயன்படுத்த தடையில்லா மின்சாரம் கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வறட்சி நிவாரண பணிகளை முழுமையாக மேற்கொள்ள தமிழக அரசு கோரும் நிதியை மத்திய அரசு முழுமையாக அளிக்க வேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் சந்திரசேகர ஆசாத், மாவட்ட செயலாளர் சரவணன் மற்றும் விவசாய சங்க அமைப்புக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண் டனர்.

**கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு ரூ.31 ஆயிரம் கோடி பேரிடர் நிதியை, மத்திய அரசு வழங்கவேண்டும் பாரதீய கிசான் சங்க கூட்டத்தில் தீர்மானம்**

திருச்சி

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு மத்திய அரசு ரூ.31 ஆயிரம் கோடியை பேரிடர் நிதியாக வழங்கவேண்டும் என்று பாரதீய கிசான் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாரதீய கிசான் சங்க கூட்டம்

திருச்சி மாவட்ட பாரதீய கிசான் சங்க நிர்வாகிகள் கூட்டம், மாவட்ட தலைவர் அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொதுச்செயலாளர் வீரசேகரன், துணை தலைவர்

பழனியாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணை தலைவர் வக்கீல் அய்யாக்கண்ணு, வாழை விவசாய பிரிவு தலைவர் வைத்தியநாதன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

<u>வறட்சியால் பாதிப்பு</u>

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

ஆந்திரா, கேரளா, மராட்டிய மாநிலங்களில் 5 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதற்கு மத்திய அரசு ரூ.2,900 கோடிகளை பேரிடர் நிதியாக வழங்கி உள்ளது. ஆனால் தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் 31 மாவட்டங்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு உள்ளது. அதிலும் காவிரி பாய்ந்து செழிப்பாக இருந்த 9 மாவட்டங்களில் உள்ள லட்சக்கணக்கான 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த மரங்கள் எல்லாம் வறட்சியின் காரணமாக காய்ந்து அழிந்து விட்டது. தமிழகத்தில் மத்திய வறட்சி நிவாரண குழு பார்வையிட்டு சென்று 15 நாட்கள் ஆகிவிட்டது. ஆனாலும் இன்னமும் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிவாரண உதவி வழங்கவில்லை.

<u>ரூ.31 ஆயிரம் கோடி</u>

எனவே இனியும் மத்திய அரசு தமிழகத்தை மாற்றாந்தாய் கண்ணோட்டத்தில் பார்க்காமல் மிக மிக மோசமாக அழிந்து விட்ட 31 மாவட்ட விவசாயிகளுக்கும் மாவட்டத்திற்கு ரூ.1000 கோடி வீதம் 31 ஆயிரம் கோடியை பேரிடர் நிதியாக உடனடியாக வழங்கவேண்டும். மேலும் விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் உடனடியாக தள்ளுபடி செய்யவேண்டும். இல்லை என்றால் ஜூன் 26–ந்தேதி தெப்பக்குளம் தபால் நிலையம் முன் விவசாயிகள் மறியல் போராட்டம் நடத்துவது. இந்த போராட்டத்தை இறுதி செய்வது தொடர்பாக வருகிற 26–ந்தேதி திருச்சி சீராத்தோப்பில் மாநில தலைவர் தலைமையில் சங்கத்தின் நிர்வாகிகள் கூட்டத்தை நடத்துவது.மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் மாவட்ட செயலாளர் கணேசன் நன்றி கூறினார்.

**ஏலம் விடப்பட்ட கருவேல் தோட்டங்களில் கிடைத்த பங்குத்தொகை ரூ.23 லட்சம் ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கல்**

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டத் தில் வனத்துறை மூலம் உற்பத்தி செய்யப்பட்டு ஏலம் விடப்பட்ட கரு வேல் தோட்டங்களில் ஊராட்சி களுக்கான பங்குத்தொகை ரூ.23 லட்சத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு கலெக்டர் தரேஸ் அஹமது வழங்கினார்.

**ஏலத்தொகை**

பெரம்பலூர் வனக் கோட்டத்தில் வேப்பந்தட்டை வட்டாரத்தில் பூலாம்பாடி ஊராட்சியில் கீரவாடி, நெய் குப்பை, பெரம்பலூர் வட்டா ரத்தில் எசனை, எளம்பலூர், குரும்பலூர், ஆலம்பாடி ஊராட்சியில் செஞ்சேரி, ஆலத்தூர் வட் டாரத்தில் இரூர், வரகுபாடி, நக்கசேலம், வேப்பூர் வட் டாரத்தில் ஆயக்குடி ஆகிய இடங்களில் உள்ள கருவேல் தோட்டங்கள் வனத் துறையின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு ஏலம் விடப்பட்டன. இந்த ஏலத் தொகை யில் 75 சதவீதம் சம்பந்தப்பட்ட ஊராட்சி, பேரூராட்சிகளுக்கு வனத் துறையால் வழங்கப் படுகி றது.

**ரூ.23 லட்சம்**

இதனடிப்படையில் பூலாம் பாடி ஊராட்சிக்கு ரூ.3 லட்சத்து 13 ஆயிரத்து 515 ம், வரகுபாடி ஊராட்சிக்கு 2 லட்சத்து 37 ஆயிரத்து 932 ம், இரூர் ஊராட்சிக்கு 58 ஆயிரத்து 137 ம், ஆலம்பாடி ஊராட்சிக்கு 4 லட்சத்து 4 ஆயிரத்து 138 ம், குரும்பலூர் பேரூராட்சிக்கு 8 லட்சத்து 60 ஆயிரத்து 438 ம், ஆயக்குடி ஊராட்சிக்கு ரூ.76 ஆயிரத்து 538 ம், நக்கசேலம் ஊராட்சிக்கு ரூ.17 ஆயிரத்து 63 ம், எளம்பலூர் ஊராட்சிக்கு ரூ.61 ஆயிரத்து 864 ம், நெய் குப்பை ஊராட்சிக்கு ரூ.1 லட்சத்து 8 ஆயிரத்து 152 ம், எசனை ஊராட்சிக்கு ரூ1 லட்சத்து 78 ஆயிரத்து 474 ம், என மொத்தம் ரூ.23 லட்சத்து 16 ஆயிரத்து 251 தொகையை காசோலைகளாக சம்பந்தப் பட்ட ஊராட்சி தலைவர் களிடம் மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

**கலந்து கொண்டவர்கள்**

இந்த நிகழ்ச்சியில் பெரம் பலூர் நகராட்சித் தலைவர் ரமேஷ், ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்கள் ஆர்.பி.மருதராஜா, கிருஷ்ண குமார், வெண்ணிலா, ஜெய லட்சுமி, மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர்சேகர், பேரூராட் சித் தலைவர் கள் பாப்பம்மாள், ராமசாமி, மாவட்ட வன அலுவலர் வடி வேல், கைவினை வாரிய முன் னாள தலைவர் ரவிச் சந்திரன், பெரம்பலூர் வட்டாட்சியர் ரெங்கராஜ், உள்பட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொது மக்கள் கலந்து கொண் டனர்.

## வரத்து குறைந்ததால் பெரியகுளம் மார்க்கெட்டில் காய்கறி விலை ‘கிடு,கிடு’ உயர்வு ஒரு கிலோ வெங்காயம் ரூ.80–க்கு விற்பனை

பெரியகுளம்,

வரத்து குறைந்ததால் பெரியகுளம் மார்க்கெட்டில் காய்கறி விலை ‘கிடு,கிடு’வென உயர்ந்துள்ளது. ஒரு கிலோ வெங்காயம் ரூ.80–க்கு விற்பனை செய்யப் படுகிறது.

<u>விலை உயர்வு</u>

தேனி மாவட்டத்தில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டு தொடக்கத்திலும் போதிய அளவு பருவமழை பெய்ய வில்லை. இதனால் விவசாயம் செய்யமுடியாமல் விவ சாயிகள் பரிதவித்து வரு கின்றனர். இதன் காரணமாக காய்கறிகள் விளைச்சல் குறைவு எதிரொலியாக மாவட்டத்தில் உள்ள அனைத்து உழவர் சந்தை மற்றும் தினசரி சந்தைகளுக்கு காய்கறிகள் வரத்து குறைந்து உள்ளது. வரத்து குறைவால் காய்கறிகளின் விலை அதிகரித்து உள்ளது.

பெரியகுளம் நகரில் உள்ள தினசரி மார்க்கெட்டிற்கு, கொடைக்கானல் மலைப்பகுதி மற்றும் பெரியகுளம் சுற்று வட்டார பகுதியில் உள்ள கிராமங்களில் இருந்தும் விவசாயிகள் காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்து விட்டு செல்வார்கள். இந்நிலையில் பெரியகுளம் தினசரி காய்கறி மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை ‘கிடு,கிடு’ வென உயர்ந்துள்ளது.

<u>வெங்காயம் விலை</u>

ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ. 80–க்கும், உருட்டு தக்காளி ஒரு கிலோ ரூ.50–க்கும், நாட்டு தக்காளி ஒரு கிலோ ரூ.80–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அதே போன்று கத்தரிக்காய் கிலோ ஒன்று ரூ.40–க்கும், பச்சைமிளகாய் கிலோ ஒன்று ரூ.80–க்கும், உருளைக்கிழங்கு கிலோ ஒன்று ரூ.28–க்கும், பட்டர்பீன்ஸ் கிலோ ஒன்று ரூ.100–க்கும், அவரைக்காய் கிலோ ஒன்று ரூ.80–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கொத்தமல்லி, புதினா மற்றும் இஞ்சி ஆகியவற்றின் விலையும் எப்பொழுதும் இல்லாத அள விற்கு விலை உயர்ந்துள் ளது.

பெரியகுளம் காய்கறி மார்க்கெட்டில் நேற்று வழக்கத்தை விட பொதுமக்களின் வருகை மிக குறைவாகவே இருந்தது. ஏழைகளுக்கு எட்டாக் கனியாக தற்போது காய்கறிகள் உள்ளது. விலைவாசி உயர்ந்து வரும் நிலையில் தற்போது காய்கறிகளின் விலையும் அதிகரித்ததால் பொதுமக்கள் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து வியாபாரி ஒருவரிடம் கேட்ட போது, ‘மழை இல்லாததால் விவசாயம் செய்ய முடியாத நிலையில், குறைந்த அளவு விவசாயம் செய்யப்பட்ட விளை நிலங்களில் விளைச் சலும் அதிக அளவில் இல்லை. இதனால் காய்கறிகள் வரத்து மிகவும் குறைவாகவே உள்ளது. வெளி

மாநிலங்களில் இருந்து சில காய்கறிகளை வாங்குகின் றோம். இதனால் காய்கறிகளை அதிக விலைக்கு விற்க வேண்டிய சூழ்நிலை உள்ளது’ என்றார்.

## கறவை பசுக்கள், ஆடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை 24, 25 ஆகிய தேதிகளில் நடக்கிறது

நெல்லை

கறவை பசுக்கள், ஆடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை வருகிற 24, 25 ஆகிய தேதிகளில் நடக்கிறது.இது குறித்து நெல்லை மாவட்ட கலெக்டர் சி.சமயமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

இலவச ஆடுகள்

தமிழக முதல்– அமைச்சரால் தொடங்கப்பட்ட விலை இல்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களில் தமிழகத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வீதம் 31 மாவட்டங்களில் 2½ லட்சம் பயனாளிகளுக்கு 10 லட்சம் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.மேலும் 21 மாவட்டங்களில் 24 ஆயிரம் பயனாளிகளுக்கு 24 ஆயிரம் கறவை பசுக்களும், 2011–2012 மற்றும் 2012–2013 ல் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட குறியீடு

2011–2012 –ம் ஆண்டில் 550 கறவை பசுக்கள், 16 ஆயிரத்து 336 ஆடுகளும் இம்மாவட்டத்தில் வழங்கப்பட்டு மாவட்டத்துக்கான குறியீடு முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. ஓர் ஆண்டு இலக்கு ஐந்து மாதங்களிலேயே சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. 2012–2013 ம் ஆண்டில் 580 கறவை பசுக்களும், 24 ஆயிரத்து 580 ஆடுகளும் இம்மாவட்டத்தில் வழங்கப்பட்டு, மாவட்டத்துக்கான குறியீடு முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. இப்பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது.விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்கள். பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

24, 25 தேதிகளில்...

விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் வருகிற 24, 25 ஆகிய 2 நாட்கள் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது.விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெற்று பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.இவ்வாறு அந்த அறிக்கையில் கலெக்டர் சி.சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.